

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 - முரசு: 82 - ஒலி: 74 - திருவள்ளுவர் ஆண்டு 2054 - ஐப்பசி 06 - திங்கள்கிழமை 23 அக்டோபர் 2023 - சென்னை 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 74: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 06 - Monday 23 October 2023 - Chennai 10 Pages ₹ 5.00


## வரும் நாடாளுமன்றத் தேர்தல் களம்;

# இந்தியாவைக் காத்திட வெற்றிக்கனி பறிப்போம்!

## திருவண்ணாமலையில் வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**திருவண்ணாமலை, அக். 23 -**

**திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல வாக்குச் சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “வரும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் இந்தியாவைக் காத்திட வெற்றிக்கனி பறிப்போம்’ என்று உறுதிபடக் கூறினார்.**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (22-10-2023) திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

நாடாளுமன்றக் களம் நமக்காக காத்திருக்கிறது. வெற்றிக் கனியைப் பறிக்க, அந்தத் தேர்தல் பணிக்கான தொடக்கப்புள்ளியான வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தை நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம். மத்திய மண்டல மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்கள் கூட்டம் திருச்சியிலும் தென் மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் இராமநாதபுரத்திலும் மேற்கு மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் திருப்பூரிலும் நடந்தது. இப்போது உங்களுடைய முகங்களை பார்ப்பதற்காகவே இந்த வடக்கு மண்டல மாநாட்டிற்கு கழகத்தின் கோட்டையாக விளங்கும் திருவண்ணாமலைக்கு நான் வந்திருக்கிறேன்.

### “சீக்ரெட் ஆப் மை எனர்ஜி”!

ஒளி மிகுந்த ஊரில் உங்கள் முகங்களில் எல்லாம் உதயசூரியனின் ஒளியை பார்க்கிறேன். தினமும் காலையில் சூரிய ஒளியை பார்க்கும்போது என்ன மாதிரியான உற்சாகம் ஏற்படுமோ, அதே மாதிரியான உற்சாகம்தான் உங்களை பார்க்கும் போதும் ஏற்படுகிறது! உற்சாகம் என்று சொல்வதைவிடப் புதியதொரு உணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படுகிறது என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! ஒரு நாள் முழுவதும் - ஒரு வாரம் முழுவதும் ஓய்வில்லாமல் உழைத்தாலும், அடுத்த நாள் கழக உடன்பிறப்புகளின் இருக்கப் போகிறோம் என்ற எண்ணம் வந்துவிட்டாலே புதிதாக ஒரு எனர்ஜி வந்துவிடும். ஏன் என்றால், நீங்கள்தான் ”சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி!” இந்தப் பாசப்பிணைப்பை ‘உடன்பிறப்பே...’ என்ற ஒரே ஒரு சொல் மூலமாக உருவாக்கிக் கொடுத்தவர் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலையில் நடைபெற்ற, வடக்கு மண்டல கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ. வேலு, அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை. துணை அமைப்புச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆஸ்டின், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தரணி வேந்தன், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலையும் தீபமும் போலதான், திருவண்ணாமலையும் தி.மு.க.வும்! யாராலும் பிரிக்க முடியாது! பல்வேறு வரலாற்றை நம்மடைய பொதுச் செயலாளர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, இரண்டை மட்டும் உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய கழகம் உருவான அன்று நடந்த முதல் பொதுக் கூட்டத்தில் 1,451 ரூபாய் வசூலானது. அதில் 100 ரூபாய் இதே திருவண்ணாமலையை சேர்ந்த நம்முடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ப.உ. சண்முகம் அவர்கள் வழங்கியது. 1957 தேர்தலில் நாம் முதன் முதலாக போட்டியிட்டு 15 பேர் வெற்றி பெற்றோம். அதில், 3 பேர் இந்த மாவட்டத்துக்காரர்கள்! முதல் நாடாளுமன்றத் தேர்தலில் 2 பேர் வெற்றி பெற்றார்கள். அதில் ஒன்று, இந்த திருவண்ணாமலை தொகுதி! சட்டமன்றத்துக்கு, ப.உ. சண்முகம், பி.எஸ். சந்தானம், களம்பூர் அண்ணாமலை! நாடாளுமன்றத்திற்கு, இரா.தர்மலிங்கம்! இன்றைக்கும் இவர்கள் பெயரை வரலாறு சொல்லிக் கொண்டு இருக்கிறது! அப்படிப்பட்ட நம்முடைய ப.உ.ச. அவர்களுக்கும் இரா.தர்மலிங்கம் அவர்களுக்கும் கொஞ்சம் நாட்களுக்கு முன்புதான் நம்முடைய வேலு அவர்களின் சீரிய முயற்சியில் மாவட்டக் கழகம் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடியது!

அண்ணன் துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல, 1963இல் தி.மு.க.விற்கு திருப்புமுனை தந்தது திருவண்ணாமலை இடைத்தேர்தல்! அப்போது ஆளுங்கட்சி, காங்கிரஸ்! நம்முடைய வேட்பாளர், ப.உ.ச. அவர்கள்! தேர்தல் பொறுப்பாளர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! அன்றைக்கு திருவண்ணாமலை கொடுத்த வெற்றிதான், 1967இல் நாம் ஆட்சி அமைக்க அடித்தளமாக அமைந்தது!

### வெற்றி தீபத்திற்கு அடித்தளம் அமைத்த தி.மு.க.!

அதேபோல், 2021 தேர்தலின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தது, வரவேற்புரை ஆற்றுகிறபோது வேலு அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார், ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ பயணத்தையும் இதே திருவண்ணாமலையில் இருந்துதான் நான் தொடங்கினேன். தொகுதி தொகுதியாகச் சென்று கோரிக்கை மனுக்களை வாங்கினேன். “உங்கள் கவலைகளை, கோரிக்கைகளை, எதிர்பார்ப்புகளை என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள். ஆட்சி அமைந்ததும் 100 நாட்களில் தீர்வு காண்பேன்” என்று சொன்னேன். ஸ்டாலினிடம் மனு கொடுத்தால் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு, இலட்சக் கணக்கான மக்கள் மனு கொடுத்தார்கள். அந்த அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் வெள்ளம்போல் மக்கள் திரண்டார்கள். அன்றைக்கு வெற்றித் தீபத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் பெறுவதற்கு அடித்தளம் அமைத்தது, திருவண்ணாமலை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## ஜனநாயக விரோத, மதவாத அரசியல் செய்யும் பா.ஜ.க.வை விரட்டியடிக்கும் வலிமை கொண்டவர்கள் நாங்கள்!

# இந்தியாவை “இந்தியா” கூட்டணி நிச்சயம் மீட்கும்!

## “தைனிக் ஜாக்ரன்” இந்தி நாளேடுக்கு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பேட்டியில் உறுதி!

**சென்னை, அக். 23 -**

**“தைனிக் ஜாக்ரன்” என்ற இந்தி நாளேட்டுக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த சிறப்புப் பேட்டியில், ஜனநாயக விரோத, மதவாத அரசியல் செய்யும் பா.ஜ.க.வை விரட்டியடிக்கும் வலிமை கொண்டதுதான் “இந்தியா” கூட்டணி எனவும், ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து இந்தியாவை “இந்தியா” கூட்டணி நிச்சயம் மீட்கும் எனவும் உறுதிபடக் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘தைனிக் ஜாக்ரன்’ இந்தி நாளேட்டுக்கு அளித்துள்ள நேர்காணலின் தமிழாக்கம் வருமாறு:-

**கேள்வி :-** *தமிழ்நாடு இந்தியாவின் பெரிய, வலிமையான மாநிலங்களில் ஒன்றாக இருந்தும், மொழி, மதம், சில திட்டங்கள் என எப்போதும் வடக்குடன் உரசலில் இருந்து வருவதாகத் தோன்றுவதன் காரணம் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** - தமிழ்நாடு வலிமை மிகுந்த மாநிலம் என்பது உண்மை. நாங்கள் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற சமத்துவத்தத்துவத்தை கொண்டவர்கள். எங்கள் தாய்மொழி தமிழ், இந்தியாவின் முதல் செம்மொழித் தகுதியைப் பெற்றது. தமிழ்நாட்டில் தமிழைத் தாழ்த்தி, இந்தியைத் திணிக்க முயன்றால், அதனை எப்போதும் நாங்கள் எதிர்த்துப் போராடுவோம். அதே நேரத்தில், வடமாநிலங்களும், அவரவர் தாய்மொழியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் எங்களது நிலைப்பாடு.

### நாங்கள் எந்த மொழிக்கும் எதிரியல்ல! மொழித் திணிப்பைத்தான் எதிர்க்கிறோம்!

**கேள்வி :-** *உங்கள் கட்சி இந்தி மொழிக்கு எதிரானதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** - நாங்கள் இந்தி என்கிற மொழிக்கோ வேறு எந்தவொரு மொழிக்கோ எதிரானவர்கள் அல்ல. எங்கள் கழகத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா, இதனை 1962லேயே நாடாளுமன்ற மாநிலங்களவையில் விளக்கியிருக்கிறார். இந்தித் திணிப்பைத் தான் நாங்கள் எதிர்க்கிறோம். இன்று வங்காளம், மராட்டியம், கர்நாடகம் உள்ளிட்ட அவரவர் தாய்மொழிகளைக் காக்க நினைக்கும் மாநிலங்கள் அனைத்தும் இதே நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். இந்தியா பன்முகத்தன்மை கொண்ட ஒன்றியம். இங்கே அவரவர் தாய்மொழிதான் பண்பாட்டின் உயிர்நாடி.



அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பே, தமிழ்நாட்டில் தமிழ் ஆங்கிலம் என்கிற இரு மொழிக் கொள்கைக்கான சட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்திவிட்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள். மூன்றாவது மொழி என்கிற சுமை ஏற்றப்படாத காரணத்தால், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக் குறியீடு உலகளாவிய குறியீடுகளுடன் ஒப்பிடக்கூடிய நிலையில் உள்ளது. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை நிர்ணயித்துள்ள இலக்குகளைத் தமிழ்நாடு ஏற்கனவே கடந்து, இரு மொழிக் கொள்கை வாயிலாக பல படிகள் முன்னேறியிருக்கிறது. எனவே, தமிழ்நாட்டிற்கேற்ற தனித்துவமான கல்விக் கொள்கை வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:-** *அண்மையில், உங்கள் மகனான அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதனம் குறித்து தெரிவித்த சில கருத்துகள் வட இந்தியாவில் பெரிய சர்ச்சை உண்டாக்கியது. அதில் உங்கள் நிலைப்பாடு என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** சாதி ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதை, இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதாக பா.ஜ.க.வின் ஐடி விங் பொய்யாகப் பரப்பியது. அதே போல ‘ஜெனோசைட்’ என்ற சொல்லையும் உதயநிதி பயன்படுத்தவில்லை. பா.ஜ.க. ஆட்சியில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு எந்த சாதனையும் இல்லை. 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கான ஊழல்கள்தான் வெளிப்பட்டுள்ளன. இந்த ஊழல்களுக்கு பதில் சொல்ல முடியாத பா.ஜ.க அரசு ஊழல்களைச் சுட்டிக்காட்டிய சி.ஏ.ஜி அதிகாரிகளை மாற்றி இருக்கிறது. இவற்றைத் திசைத்திருப்ப உதயநிதி பேச்சை சர்ச்சையாக்கி உள்ளார்கள்.

**கேள்வி :-** *சனாதனம் பற்றி உங்கள் மகன் தெரிவித்த கருத்துகளை அவர் திரும்பப் பெறவில்லை என்ற கருத்தே பொதுவாக உள்ளது. நீங்களும் இது பற்றி விலாவாரியாக இதுகுறித்துப் பேசாமல் இருப்பதில் ஏதேனும் அரசியல் நலன் சம்பந்தப்பட்டுள்ளதா?*

### அனைத்து மதத்தினரின் உரிமைகளை மதிப்பவர்கள் நாங்கள்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் அனைத்து மதத்தினரின் உரிமைகளையும் மதிப்பவர்கள். ஏற்றத்தாழ்வுகளை உறுதியாக எதிர்ப்பவர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்த 889 நாட்களில் 1000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம். இரண்டரை ஆண்டுகாலத்தில் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களிடம்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 23-10-2023

# அரசும் ஆலயங்களும் 1

கோவில்களை அரசே எடுத்து நடத்த வேண்டும் என்ற வழக்கு மனுவை உச்சநீதிமன்றம் இரண்டு நாட்களுக்கு முன்னால் தள்ளுபடி செய்து விட்டது. நீதிமன்றங்களின் மூலமாக இதனை அரசியல் சர்ச்சையாக ஆக்க நினைத்தவர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய அடியைக் கொடுத்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

வழக்கறிஞர் அஷ்வினி உபாத்யாய் என்பவர் உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்கிறார். அதன் உள்ளடக்கம் என்பது இதுதான்:

**“அரசியல் சாசனத்தின் 26 ஆவது பிரிவின்படி அனைத்து மதத்தினரும் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொண்டு நோக்கங்களுக்காக நிறுவனங்களை உருவாக்கவும், பராமரிக்கவும் உரிமை உள்ளது. ஆனால் இந்துகள், ஜைனர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்களுக்கு இந்த உரிமை மறுக்கப் படுகிறது. நாடு முழுவதும் உள்ள 9 லட்சம் கோவில்களில் 4 லட்சம் கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆனால் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகளுக்கு தங்கள் மத வழிபாட்டுத் தலங்களை நிர்வகிக்க உரிமை வழங்கப்படுகிறது. இது போலவே இந்து உள்ளிட்ட மற்ற மதத்தினருக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்” என்று அவர் தனது மனுவில் கோரிக்கை வைத்திருந்தார்.**

இந்த மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு விசாரித்து, இந்த வழக்கையே தள்ளுபடி செய்தது. ‘விளம்பரத்துக்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள்’ என்றும் நீதிபதிகள் கண்டித்துள்ளார்கள். “இது பற்றி நாடாளுமன்றமும், சட்டமன்றமும் தான் முடிவு செய்ய முடியும். நீதி மன்றங்களால் இவற்றுக்குத் தீர்வு கொடுக்க முடியாது” என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு சொல்லி விட்டது.

**கோவில்களை வைத்து அரசியல் செய்ய நினைக்கும் குதர்க்கப் பேர்வழிகளுக்கு நெத்தியடியாக இது அமைந்துள்ளது.**

சில வாரங்களுக்கு முன்னால் பிரதமர் நரேந்திர மோடியே இப்படி ஒரு கருத்தை தெலுங்கானா மாநிலத்தில் பேசினார். அரசாங்கத்தை நடத்தும் நிர்வாகப் பொறுப்பில் இருந்து கொண்டு அரசாங்க நிர்வாக கட்டமைப்புக்கு எதிராகவே கருத்துச் சொல்வதற்கு அவரால் மட்டும் தான் முடியும்.

**‘தமிழ்நாட்டில் உள்ள இந்து கோவில்களை, தி.மு.க. அரசு கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. கோவில் சொத்துகள் மற்றும் வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது” என்று பகிரங்கமாக மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள் பேசியதாக ‘தினமலர்’ நாளிதழ் செய்தி வெளியிட்டு இருந்தது. அருட்திரு வள்ளலாரின் 200 ஆவது பிறந்த நாள் விழாவில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனைக் கடுமையாகக் கண்டித்தார். “பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். பிரதமர் அவர்களுக்கு நான் எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் - தவறான அவதூறுச் செய்தியை சொல்வது சரியா? ஒரு மாநில அரசின் செயல்பாடு குறித்து - இன்னொரு மாநிலத்தில் போய் - பேசுவது முறையா? தர்மமா?” என்று முதலமைச்சர் கடும் கண்டனத்தை பதிவு செய்தார்.**

பிரதமரின் உரையை ‘தினமலர்’ நாளிதழ் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு இருந்தது. “அந்த நாளிதழின் நிர்வாகி ஒருவர், புகழ்பெற்ற திருக்கோவில் ஒன்றில் அறங்காவலர்களில் ஒருவராக இருக்கிறார். அப்படி யானால் அவர், அந்த கோவிலை ஆக்கிரமித்துள்ளார் என்று அர்த்தமா?” என்றும் முதலமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.17.6.2022 ஆம் நாள் தேதியிட்ட ‘தினமலர்’ பத்திரிகையில் அதன் வெளியீட்டாளர் - இல.ஆதிமூலம் அவர்கள், “கோவில் உண்டியல் பணம் எங்கும் போகாது” என்பது ஆகும்.

பொதுவாகவே கோவில் பணங்கள் முறையாக பயன்படுத்தப்படுவது இல்லை என்பது போன்ற பொய்ப் பிரச்சாரத்தை தொடர்ந்து கட்டமைத்து வருகிறார்கள். இந்த பொய்ப்பிரச்சாரத்துக்கு ‘தினமலர்’ நாளிதழே பல நேரங்களில் துணை போய்க் கொண்டிருப்பது தான். ஆனால் அதன் வெளியீட்டாளர் ஆதிமூலம் அது தவறு என்பதை விரிவாக எழுதி இருக்கிறார்.

ஆலயங்களின் பணத்தை அரசு எவ்வளவு முறையாகக் கையாள்கிறது என்பதை ஆதிமூலம் விவரிக்கிறார்...

★ மூன்றாண்டுகளாக சென்னை வடபழநி கோவிலின் தக்கார் பொறுப்பை வகித்து வருவதால் அங்கு நடக்கும் பல விஷயங்களை நான் நன்கறிவேன்.

★ சிலர் கூறுவதைப் போன்று உண்டியல் பணம் வேறு எங்கும் போவது இல்லை.

★ தனியார் துறை நிர்வாகங்களைக் காட்டிலும் ஹிந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இருக்கும் கோவில் நிர்வாகங்களில் பணவரவு - செலவுக்கான சட்ட நடை முறைகளும் கட்டுப்பாடுகளும் கடுமையாகக் கடைப்பிடிக்கப் படுகின்றன.

★ இங்கு அவ்வளவு எளிதாக முறைகேடு நடந்து விட முடியாது.

★ கோவில்களுக்கான சட்ட நடைமுறைகள் மற்றும் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, பக்தர்களுக்கான பல நற்பணிகள் தாமதமாகிறது என்று சொல்லலாமே தவிர கோவில் வருமானம் வேறு எங்கோ போகுமளவிற்கு சட்டத்தில் ஓட்டை இல்லை.

★ கோவில்களில் உண்டியல் வைக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பக்தர்களின் காணிக்கைகள் பத்திரமாகத்தான் இருக்கின்றன. மிகுந்த முன்னெச்சரிக்கையுடனேயே கையாளப்படுகின்றன.

★ காணிக்கை குறித்த பதிவேடுகள் எண்ணி முடிக்கப்பட்ட மறுநாளே அறநிலையத் துறை அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு - அங்குள்ள பதிவேடுகளில் ஏற்றப்படுகின்றன. அதிலிருந்து ஒரு நகல் தணிக்கைப் பிரிவுக்கும் அனுப்பப் படுகிறது. தனியார் நிறுவனங்களில் இல்லாத அளவுக்குக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

**- தொடரும்**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். உடன் கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே. கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்தார். உடன் கழகப் பொதுச்செயலாளர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளார் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே. குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே. கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்து, மருத்துவ மாணவ, மாணவியர்களுக்கு கையடக்க மடிக்கணினிகள் வழங்கினார். உடன் கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே. கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## தொடர் விடுமுறை: கட்டணத்தை ஏற்றிய தனியார் ஆம்னி பஸ்கள் பறிமுதல்!

சென்னை, அக். 23-

தொடர் விடுமுறையை ஒட்டி ஆம்னி பேருந்துகளில் கட்டணங்கள் அதிக வசூலிக்கப்படுவதாக பயணிகள் புகார் தெரிவித்து வந்த நிலையில், விதிகளை மீறியதாக 102 ஆம்னி பஸ்களை போக்குவரத்து துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

தமிழகத்தில் 23, 24 ஆகிய தேதிகளில் ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி பண்டிகை காரணமாக விடு முறை விடப்பட்டுள்ளது. ஏற்கனவே சனி, ஞாயிற்றுக் கிழமை விடுமுறை என்பதால் மொத்தம் 4 நாட்கள் விடுமுறை காரணமாக சென்னையில் வசிக்கும் வெளி மாவட்ட மக்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட தொடங்கினர். இதனால், வெளியூர் செல்லும் அரசு பேருந்துகள் மற்றும் ரயில் களில் பயணிகள் கூட்டம் அலைமோது கிறது.

பயணிகள் வசதிக்காக தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கழகமும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது. எனினும், இந்த பேருந்துகளிலும் புக்கிங் முடிந்து விட்டது. இதனால், பயணிகள் பலரும் ஆம்னி பேருந்துகளை நாடி செல்கின்றனர். ஆம்னி பேருந்துகளிலும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பல மடங்கு கட்டணத்தை ஏற்றி யுள்ளதாக பயணிகள் முன் வைக்கும் குற்றச்சாட்டாக உள்ளது.

**102 பஸ்கள் பறிமுதல்:**

இது தொடர்பாக தமிழக போக்குவரத்து துறைக்கும் அதிக அளவில் புகார்கள் வந்தன. இதையடுத்து, அதிரடியாக களத்தில் இறங்கிய அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். மீனம்பாக்கம் வட்டார போக்குவரத் துறை அதிகாரிகள் தாம்பரம், பெருங்களத்தூர், செங்கல் பட்டு உள்ளிட்ட பகுதிகளில் தென் மாவட்டங்களுக்கு செல்லும் ஆம்னி பேருந்து களை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது பல பேருந்து களில் பயணிகளிடம் கூடுதல் வசூலிக்கப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து 102 ஆம்னி பேருந்துகளை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சுமார் 1,545 ஆம்னி பஸ்கள் விதிகளை மீறியது கண்டு பிடிக்கப்பட்டு ரூ.27.67 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து இது போன்ற கண்காணிப்பு நடவடிக்கைகள் இருக்கும் என்று போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





# கோடிக்கணக்கான தமிழ்க் குடும்பங்களை வாழ வைக்கும் தி.மு.க. குடும்பக் கட்சிதான்!

## தலைவர் - முதல்வர் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி...

தான் என்பதை பெருமையோடு குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்!

**விழாவேந்தன் வேலு!**

இந்த பாக முகவர்களின் வடக்கு மண்டல மாநாட்டை எழுச்சியோடும் ஏற்றத்தோடும் அருணாசலம் நகரில் இருக்கும் கலைஞர் பெயரால் அமைந்த திடலில் நடத்திக் காட்டியிருக்கும் நம்முடைய மதிப்பிற்குரிய எ.வ.வேலு அவர்களுக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். "எதையும், யாரும் ஏவாமலேயே செய்யக் கூடியவர் வேலு" என்று தலைவர் கலைஞர் அவர்கள் பாராட்டினார். திருவாரூரில் கலைஞர் கோட்டம் மதுரையில் கலைஞர் நூலகம் சென்னையில் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு மருத்துவமனை இதெல்லாம் எவ்வாறு அமைய வேண்டும் என்று நான் விரும்பினேனோ, அதே மாதிரி, அழகோடும் கம்பீரத்தோடும் அமைத்தவர்தான் நம்முடைய அன்புக்குரிய வேலு அவர்கள்! கழகத்தின் 'விழா வேந்தன்' என்றால் அது, வேலுதான் என்று திருவண்ணாமலை கலைஞர் சிலை திறப்பு விழாவில் நான் சொன்னேன். அப்படிப்பட்ட அவரோடு தோளோடு தோள் நின்று பணியாற்றும் ஒருங்கிணைந்த திருவண்ணா மலை மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கு தலைமைக் கழகத்தின் சார்பிலும் - என்னுடைய முறையிலும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மார்ச் 22ஆம் நாள் அண்ணா அறிவாலயத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் நடந்தது. அதில் இருந்தே நாம் தேர்தல் பணிகளை நாம் தொடங்கிவிட்டோம். தமிழ்நாடு முழுவதும் பூத் கமிட்டிகளை அமைத்திருக்கிறோம். இதோடு நான்கு வாக்குச் சாவடி முகவர்கள் மாநாட்டை நடத்தியிருக்கிறோம். இன்னும் சென்னை மண்டலம் மட்டும்தான் பாக்கி இருக்கிறது.

ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) நியமிக்கப்பட்டார்கள். கோடிக்கணக்கான உறுப்பினர்கள் உள்ள நம்முடைய இயக்கத்தில் பல கட்ட ஆய்வுகளுக்குப் பிறகே 'வாக்குச்சாவடி பொறுப்பாளர்' என்ற அடையாள அட்டை உங்களுக்கு வழுங்கப்பட்டிருக்கிறது. அதைப் பெற்றிருக்கும் உங்களை எல்லாம் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

உங்களுக்கான வகுப்புகள் காலை முதல் மாலை வரை - நாங்கள் வரும் வரை நடந்திருக்கிறது. 'வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும்' என்ற தலைப்பில் நம்முடைய கழகத்தின் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி., அவர்களும் 'வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்துவம்' குறித்து நம்முடைய அருமைச் செயல்வீரர் நந்தகுமார் அவர்களும் - 'சமூக வலைத்தளங்களின் பயன்பாடும், செயல்படுத்த வேண்டிய முறையும்' என்பது குறித்து அருமைத் தம்பி எஸ்.கே.பி. கருணா அவர்களும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். கழகத்தின் வரலாறு, அடிப்படைக் கொள்கைகள், திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள், நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்த முயற்சிகள் - திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்த அடிப்படை தகவல்களை நம்முடைய பேரன்பிற்குரிய லியோனி அவர்களும் மருத்துவர் எழிலன் அவர்களும் உங்களுக்கு எடுத்து மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறார்கள்.

இவர்கள் மூலமாக கொள்கை வழிகாட்டுதலும் - தேர்தல் பயிற்சியும் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இது எல்லாவற்றையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும். இதெல்லாம் இந்தத் தேர்தலுக்கு மட்டுமல்ல, எல்லா தேர்தலுக்கும் பயன்படுத்த வேண்டிய பணிகள்!

திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு, தர்மபுரி கிழக்கு, தர்மபுரி மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொறுப்பாளர்கள் இங்கே கூடியிருக்கிறீர்கள்.

உங்களை எல்லாம் ஒருங்கிணைத்து, அழைத்து வந்திருக்கும் மாவட்டக் கழகச் செயலாளர்களான, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் காந்தி, அமைச்சர் மஸ்தான், தா.உதயசூரியன், நந்தகுமார், புகழேந்தி, தடங்கம் சுப்பிரமணி, ஒய்.பிரகாஷ், தேவராஜி, வசந்தம் கார்த்திகேயன், தரணிவேந்தன், மதியழகன், பழனியப்பன் என அனைவர்க்கும் என்னுடைய நன்றியை தலைமைக் கழகத்தின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்!

**வெற்றி ஒன்றுதான் உங்கள் இலக்கு!**

வாக்குச்சாவடி பொறுப்பாளர்களான நீங்கள்தான் உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் வாக்காளர்களுக்கு முழு பொறுப்பாளர். வாக்குச் சாவடிப் பொறுப்பாளர் என்றால், நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கும் நீங்கள்தான் பொறுப்பாளர்! மறந்துவிடாதீர்கள்! உங்களை நம்பித்தான் 'நாற்பதும் நமதே! நாடும் நமதே!' என்று நான் கம்பீரமாக முழங்கு கிறேன்! அதே கம்பீரத்தோடு இன்று முதலே நீங்களும் தேர்தல் பொறுப்பாளராக கடமையாற்ற வேண்டும்! அந்த வகையில் வெற்றி ஒன்றுதான் உங்களின் இலக்காக இருக்க வேண்டும். இந்த வெற்றியை அடைவதற்கான வழிமுறைகளில் நீங்கள் மிகச்சரியாக செல்ல வேண்டும்!

**கடமைகளை மறந்துவிடாதீர்!**

பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் உங்களுக்கு நிறைய கடமைகள் இருக்கிறது. நீங்கள் மறந்துவிட கூடாது.

* **வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, முதல் பணி! வாக்காளர் பட்டியலில் உங்கள் வாக்குச் சாவடிக்குரிய வாக்காளர்களின் விவரங்கள் சரியாக இருக்கிறதா, யாராவது போலி வாக்காளர்கள் இருக்கிறார்களா, இறந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கிறதா என்று முழுவதுமாகச் சரிபார்க்கும் கடமை உங்களுடையது.**
* **வாக்காளர்களை சந்தித்து, பிரச்சாரம் பரப்புரை மேற்கொள்வதும், நம்முடைய சாதனைகளை அவர்களிடம் தொடர்ந்து எடுத்துச் சொல்வதும் இரண்டாவது பணி!**
* **வாக்குப்பதிவு நாட்களில் வாக்காளர்களை வாக்குப்பதிவு மையங்களுக்கு வரவைப்பது மூன்றாவது பணி! இது மிக மிக முக்கியமான பணி!**

உங்கள் வாக்குச்சாவடியில் இருக்கும் ஒவ்வொரு குடும்பத்திலும் நீங்கள் ஒருவராக மாற வேண்டும். முதலில், உங்கள் வாக்குச் சாவடியில் இருக்கும் ஒவ்வொருவரை பற்றியும் முழுவதுமாக தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். அதற்கான மாதிரிப் படிவம்தான் இப்போது, உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தொகுதிவாரியாக அச்சிடப்பட்டு உங்களிடம் சீக்கிரமாக வந்து சேரும். வாக்காளரின் பெயர், வயது, அவர்கள் குடும்பத்தினர் யார் யார், என்ன படித்திருக்கிறார்கள், என்ன தொழில் செய்கிறார்கள், எந்தக் கட்சியை சார்ந்தவர் என்ற முழு விவரமும் உங்களிடம் இருக்க வேண்டும். தினமும் ஒருமணி நேரத்தைக் கழகத்துக்காக ஒதுக்குங்கள். ஒதுக்குவீர்களா?

## தினமும் ஒரு மணி நேரம் கழகத்துக்காக ஒதுக்குங்கள்!

**அரசின் திட்டங்களை எடுத்துச் சொல்லுங்கள்!**

அடுத்ததாக, அரசின் திட்டங்களையும் முழுமையாகத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கும் புத்தகத்தைப் படித்துப் பார்த்தாலே அரசின் திட்டங்கள் பற்றி உங்களுக்குத் தெரிந்துவிடும். யாருக்கு என்ன தேவையோ அதை பெற்றுத் தாருங்கள். முதியோர் உதவித் தொகை, பட்டா மாறுதலில் உதவி, இவ்வாறு என்ன உதவி தேவை என்று கேட்டு நிறைவேற்றித் தாருங்கள். இதனைச் செய்து தர உங்கள் பகுதியின் ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்களையோ, சட்டமன்ற உறுப்பினர்களையோ அல்லது அமைச்சர்களையோ நீங்கள் அணுகுங்கள்.

வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கொண்டு வரும் கோரிக்கைகளுக்கு மிகுந்த முக்கி யத்துவம் கொடுக்க வேண்டும் என்று எல்லோரிடமும், குறிப்பாக அமைச்சர்களிடமும் கட்டாயமாகச் சொல்லுவேன். நீங்கள் கொண்டு வரும் தகுதி வாய்ந்த கோரிக்கைகள் கட்டாயம் நிறைவேற்றித் தரப்படும் என்ற உறுதியை நான் இங்கு அழுத்தம் திருத்தமாக குறிப்பிட விரும்புகிறேன்.

ஒவ்வொரு நாளும் பத்து வீட்டுக்குப் சென்று பேசுங்கள். ஒரு மாதத்தில் உங்கள் பூத்தில் இருக்கும் அத்தனை வீட்டிற்கும் சென்று வந்துவிடலாம். ஒரு சிலர் வரவேற்கவில்லை என்றாலும் திரும்ப திரும்ப செல்லுங்கள். நம்முடைய சாதனைகளை எடுத்துச் சொல்லிப் புரிய வையுங்கள். எல்லார்க்கும் பொதுவான மக்களாட்சியை நாம் நடத்திக் கொண்டு வருகிறோம். நம்முடைய திட்டங்களால் தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் ஏதோ ஒருவிதத்தில் பயனடைகிறது. அப்படி பார்த்து பார்த்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம். இதனால் மக்கள் நம்முடைய ஆட்சிமீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

**கோடிக்கணக்கான பெண்களுக்கு பயனளிக்கும் திட்டம்தான் மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம்!**

**ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படுகிறது.**

**42 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பெற்றுவரும் 1000 ரூபாய் உதவித்தொகையை 1200 ரூபாயாக ஆக்கி இருக்கிறோம்.**

**18 லட்சம் பள்ளி மாணவ மாணவியர்க்கு காலை உணவுத் திட்டம்!**

**13 லட்சம் பெண்களின் நகைக்கடன் ரத்து!**

## "பச்சைப் பொய்யர்" பழனிசாமி!

இவ்வாறு கோடிக்கணக்கான - இலட்சக்கணக்கானவர்கள் பயன்பெறும் திட்டங்களை நிறைவேற்றுகிற அரசுதான், நம்முடைய திராவிட மாடல் அரசு! இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய திட்டங்கள் மூலமாக பயனடைந்தவர்கள், ஊடகங்களில் தரும் பேட்டிகளில் உள்ளத்தில் இருந்து பேசுகிறார்கள். அது மகிழ்ச்சியாக இருக்கிறது.

**1000 ரூபாய் மகளிரை ஈர்த்துள்ளது.**

தேர்தலுக்கு முன்பு இருந்ததைவிட, ஐந்து, ஆறு மாதங்களுக்கு முன்பு நான் சுற்றுப்பயணம் செய்தபோது இருந்த மகிழ்ச்சியைவிட, உணர்ச்சியைவிட, வரவேற்பைவிட இப்போது கடந்த இரண்டு மாதகாலமாக எங்கு பார்த்தாலும் பெண்கள் அலைமோதுகிற அந்தக் கூட்டத்தை நான் கண்கூடாக பார்க்கிறேன். என்ன காரணம்? 1,000 ரூபாய். அது இன்றைக்கு மகளிரை ஈர்த்திருக்கிறது. வாக்களித்தவர்கள் மட்டுமல்ல நம்மை எதிர்த்தவர்கள்கூட இப்போது பாராட்டுகிறார்கள். இது நம்முடைய எதிரிகளை அச்சமடைய வைத்திருக்கிறது.

சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்கள் பேசியிருக்கிறார். பத்திரிகைகளில் படித்துப் பார்த்தேன். அது பேச்சு அல்ல, வயிற்றெரிச்சல். தன்னுடைய வயிற்றெரிச்சலை வார்த்தைகளாகக் கொட்டி இருக்கிறார். தி.மு.க. ஆட்சிக்கு வந்து எந்த ஒரு புதிய திட்டத்தையும் கொண்டுவரவில்லை என்று பேசியிருக்கிறார். இந்த இரண்டரை ஆண்டுகால சாதனைகளைச் சொல்ல ஆரம்பித்தால் அதற்கே இரண்டு மணி நேரமாகும்! அவ்வளவு சாதனைகளை செய்திருக்கிறோம்!

பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த 'பச்சைப் பொய்யர்' பழனிசாமி, சொன்னதிலேயே பெரிய பொய் எது என்றால் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களைதான் ரிப்பன் வெட்டி நாம் தொடங்கி வைக்கிறோமாம். பிளான் போட்டு, கட்டி முடித்து வைத்து விட்டார்களாம். நாம் சென்று ரிப்பன் வெட்டி விட்டு வந்துவிட்டோமாம். யாரு? பொய்ச்சாமி, மன்னிக்கவும் பழனிசாமி பேசுகிறார்.

நான் கேட்கிறேன், மகளிருக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோமே? அது நீங்கள் போட்ட திட்டமா?

எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்களை அன்போடு பணிவோடு கேட்கிறேன், விடியல் பயணம் - பெண்களுக்கான இலவசப் பேருந்து பயணத் திட்டம் நீங்கள் போட்ட திட்டமா?

காலைச் சிற்றுண்டித் திட்டம், யார் போட்ட திட்டம்?

புதுமை பெண் திட்டத்தில், மாணவியர்க்கு 1000 ரூபாய் தருகிறோமே, இது பழனிசாமியின் திட்டமா?

இலட்சக்கணக்கான மாணவர்களை முன்னேற்றும் 'நான் முதல்வன் திட்டம்' அ.தி.மு.க. திட்டமா?

நம்மைக் காக்கும் 48, இல்லம் தேடிக் கல்வி இதெல்லாம் என்ன என்றாவது பச்சைப் பொய்யர் பழனிசாமிக்கு தெரியுமா?

2 லட்சம் உழவர்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம். இது அ.தி.மு.க. திட்டமா?

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகி வருகிறார்களே? இது பா.ஜ.க.வின் பாதம் தாங்கியாக இருக்கிறாரே பழனிசாமி அவரின் ஆட்சியில் நடந்ததா?

மாபெரும் தமிழ்க் கனவு - தமிழ் பரப்புரைக் கழகம் நடத்தி வருகிறோமே! இந்த திட்டம் எல்லாம் பழனிசாமியின் கனவிலாவது வந்திருக்குமா?

தந்தை பெரியார் அண்ணல் அம்பேத்கர் - அருட்பிரகாச வள்ளலார் மகாகவி பாரதியார் ஆகியோருக்கான விழாக்களை நம்மை திராவிட மாடல் அரசு நடத்துகிறதே, இவர்களின் கொள்கைகளாவது என்ன என்று கம்பராமாயணம் படித்த பழனிசாமி சொல்வாரா?

வன்னியர் இடஒதுக்கீட்டிற்கு போராடிய இடஒதுக்கீட்டு தியாகிகளுக்கு மணிமண்டபம் அமைத்து வருகிறோமே, இது அ.தி.மு.க. ஆட்சியில் போட்ட திட்டமா?

ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையத்தை பழனிசாமி தன்னுடைய ஆட்சியில் கண்டுகொண்டாரா?

அரசு ஊழியராக இருக்கும் மகளிருக்கு மகப்பேறு விடுப்பை 9 மாதத்தில் இருந்து 12 மாதம் ஆக்கியது நம்முடைய தி.மு.க. ஆட்சி!

ஆட்சிக்கு வந்து 1000 நாட்கள் கூட ஆகவில்லை, ஆயிரம் கோயில்களில் குடமுழுக்கு நடத்தியிருக்கும் ஆட்சிதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி.

**பொய் பொய்யாகச் சொல்லும் பழனிசாமி!**

இது எதுவும் பழனிசாமி கண்ணுக்கு ஏன் தெரியவில்லை? தெரிந்து கொள்ள விரும்பவில்லையா? இல்லை, இன்னும் தரையிலேயேதான் ஊர்ந்துகொண்டு இருக்கிறாரா? தலையைக் கொஞ்சம் தூக்கிப் பாருங்கள் பழனிசாமி அவர்களே! தமிழ்நாடு மாறிக் கொண்டிருக்கிறது!

## தீபம் தெரிவதைப் போல - இந்தியாவிற்கான நம்பிக்கை ஒளி தெரிகிறது!

நான்காண்டுகாலம் ஆட்சி அதிகாரம் இருந்தபோது மக்களுக்காக எதையுமே செய்யாமல், இப்போது பதவி பறிபோன பிறகு, தன்னைப் போலவே எல்லாரும் இருப்பார்கள் என்று நினைக்கிறார் பழனிசாமி. மக்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டார்கள் என்று நினைத்துவிட்டார் போல! அதனால்தான் பொய் பொய்யாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்!

**அவரின் ஆட்சியில் தமிழ்நாடு எல்லா துறைகயிலும் முதலிடம் பிடித்ததாம். பழனிசாமி சொல்கிறார். நாம் கேட்பது, சொந்தமாக விதைத்து அறுவடை செய்வதுதான் பெருமை!**

**மூன்று வேளாண் சட்டங்களுக்கு ஆதரவாகவும் போராடிய ஏழை விவசாயிகளுக்கு எதிராகவும் பேசிய - போலி விவசாயி பழனிசாமிக்கு இதெல்லாம் எப்படி தெரியும்?**

**உண்மையில், அவரின் ஆட்சியில் தமிழ்நாட்டு நலன்களும் உரிமைகளும் பா.ஜ.க.விடம் அடகு வைத்து காவு கொடுக்கப்பட்டது! இதுதான் வரலாறு!**

**போதைப் பொருளான குட்கா விற்க லஞ்சம் வாங்கியதற்காக ஒரு அமைச்சர் வீட்டிற்கே ரெய்டு வந்ததை மறைக்க முடியுமா?**

**சாத்தான்குளம் ஜெயராஜ் - பெனிக்ஸ் மரணம் இன்னும் ஆறாத வடுவாக இருக்கிறது!**

**தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டத்தில் காக்கை குருவிகளை சுடுவது போல 13 பேரைச் சுட்டுக் கொன்றுவிட்டு, டி.வி.யைப் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று சொன்னீர்களே பழனிசாமி... உங்கள் முகத்திரைதான் நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணையத்தின் அறிக்கையில் அப்பட்டமாகக் கிழிந்து தொங்கியதே! மறந்துவிட்டீர்களா?**

**எல்லாவற்றுக்கும் மேல், பொல்லாத ஆட்சி அதற்குப் பொள்ளாச்சியே சாட்சி என்று தமிழ்நாடே கொதித்ததே மறந்துவிட்டதா? பொள்ளாச்சி பாலியல் கொடுமை நெஞ்சில் ஈரம் இருக்கும் எல்லோரையும் கதற வைத்தது... ஆனால் பழனிசாமி அதைப்பற்றி கொஞ்சம் கூட கவலைப்படவில்லை... இது தான் பழனிசாமி ஆட்சியின் லட்சணம்.**

இதையெல்லாம் மக்கள் மறந்து இருப்பார்கள் என்று நினைத்து வாய்ச்சவடால் விட்டுக் கொண்டு இருக்கிறார் திருவாளர் பழனிசாமி.

தி.மு.க. குடும்பக் கட்சியாம்! ஆமாம், குடும்பக் கட்சிதான்! அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறேன், தி.மு.க. குடும்பக் கட்சிதான். கோடிக்கணக்கான தமிழ்க் குடும்பங்களை வாழவைக்கும் கட்சி, தி.மு.க. பேரறிஞர் அண்ணா, தமிழினத் தலைவர் கலைஞர் காட்டிய பாதையில், ஒற்றைக் கையெழுத்தில் கோடிக்கணக்கான குடும்பங்களின் மனதில் மகிழ்ச்சியை உருவாக்கிய கட்சி, தி.மு.க.!

பச்சைப் பொய் பழனிசாமி அவர்களே! சம்பந்திக்கும், சம்பந்தியின் சம்பந்திக்கும் காண்ட்ராக்ட் கொடுத்து, ஹைகோர்ட் - சுப்ரீம் கோர்ட்டு என்று ஓடிக்கொண்டே இருக்கும் உங்களுக்கு, குடும்பக் கட்சி என்று விமர்சிக்க எந்த யோக்கியதையும் இல்லை.

கடந்த ஐந்து ஆண்டுகளாக நடந்த அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர் பழனிசாமி. வருகிற நாடாளுமன்றத் தேர்தலிலும் முழுமையாகத் தோற்கடிக்கப்படுவார்! பா.ஜ.க. கூட்டணியில் இருந்தால் டெபாசிட் கூட தேறாது என்று திட்டம் போட்டு, டெபாசிட்டைக் காப்பாற்றிக் கொள்ள தனியாகப் பிரிந்த மாதிரி 'உள்ளே வெளியே' நாடகத்தை நடத்திக் கொண்டு இருக்கிறார்.

**கூட்டணி தர்மம் என்று சப்பைக் கட்டு கட்டுவதா?**

சிறுபான்மை இனத்தவர் மீது திடீர் என்று பாசம் பொங்குகிறது. குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்புரிமை ரத்து, முத்தலாக் தடை என்று எல்லா சட்டத்தையும் கண்ணை மூடி ஆதரித்தவர் பழனிசாமி. அதை எதிர்த்த தி.மு.க.வினரைச் சட்டமன்றத்திலேயே எப்படியெல்லாம் பேசினார், பா.ஜ.க.விற்கு எப்படியெல்லாம் பல்லக்கு தூக்கினார் என்று எல்லோருக்கும் நன்றாக தெரியும்! "குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் யார் பாதிக்கப்பட்டார்கள்" என்று கேட்டார் பழனிசாமி. இப்படியெல்லாம் ஆணவத்தோடு பேசிவிட்டு, இப்போது, 'கூட்டணி தர்மம்' என்று சப்பைக்கட்டு கட்டி தன்னுடைய நாடகத்திற்கு ஸ்க்ரிப்ட் எழுதிக் கொண்டு இருக்கிறார்.

ஆனால் மக்கள் இப்போதும் என்ன கேட்கிறார்கள், "மக்களை காவு கொடுத்துவிட்டு எதற்காக கூட்டணி வைத்தார்?" பா.ஜ.க.வை விமர்சிக்காமலேயே பா.ஜ.க.விற்கு எதிராக கூட்டணி அமைக்கிறேன் என்று அவர் போடும் நாடகம், மிகப்பெரிய நரித்தனத்தின் அடையாளம்! இவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் ஆட்டுவிக்கப்படுகிறார். தேர்தல் நெருங்க நெருங்க அதுவும் அம்பலம் ஆகிவிடும்.

**எத்தனையோ போர்க்களங்களை பார்த்த திருவண்ணாமலை வட்டாரம்!**

தேர்தல் என்ற போர்க்களம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது. ஈராயிரம் ஆண்டுகளாக தமிழ்நிலத்தில் அதிகமான போர்கள் நடந்த மாவட்டம் திருவண்ணாமலை மாவட்டம்!

முதலாம் தெள்ளாற்றுப் போர் - இரண்டாம் தெள்ளாற்றுப் போர் - திருவண்ணாமலைப் போர் - வந்தவாசிப் போர் - தேசூர்ப் போர் - ஆரணிப் போர் - செங்கம் கணவாய்ப்போர் - சேத்துப்பட்டில் போர் என்று வரிசையாக எத்தனையோ போர்க்களங்களைப்பார்த்த ஊர், இந்தத்திருவண்ணாமலை வட்டாரம்!

இப்போது நாம் இந்திய ஜனநாயகத்தைக் காக்கும் போர்க்களத்தில் நிற்கிறோம். இந்த தேர்தல் களத்தில் நாம் காணப் போகும் வெற்றிதான் எதிர்கால இந்தியாவிற்கு மிக மிக முக்கியம்!

100 ஆண்டு காலமாக சமூகநீதியின் மூலமாக தமிழ்நாடு பல்வேறு முன்னேற்றங்களை அடையத் தொடங்கியது. கடந்த ஐம்பது ஆண்டுகளாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி எத்தனையோ முன்னெடுப்புகளை செய்திருக்கிறது. தொடர்ந்து இப்போது இந்தியாவே தலைநிமிர்ந்து பார்க்கும் ஆட்சியை நடத்தி வருகிறோம். இந்த திராவிட மாடல் கோட்பாடானது - இந்தியா முழுமைக்கும் செயல்படுத்தப்படுமானால் உலகில் தலைசிறந்த நாடாக இந்தியா உயரும்!

மக்களைப் பிளவுபடுத்தி அடிமைப்படுத்தும் பாசிச பா.ஜ.க.விற்கு முற்றுப்புள்ளி வைக்கும் தேர்தல் களத்திற்கு இந்தத் திருவண்ணாமலை பாசறைக் கூட்டமானது நல்ல வழிகாட்டியாக அமையட்டும்.

நிறைவாக, தீபம் தெரிவதைப் போல இந்தியாவிற்கான நம்பிக்கை ஒளி தெரிகிறது. இந்தியா வாழ்க! இந்தியா கூட்டணி வெல்க! நாற்பதும் நமதே! நாடும் நமதே!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# இந்திய மக்களின் ஒருங்கிணைந்த கூட்டணிதான் ‘இந்தியா’ கூட்டணி!

## தலைவர் - முதல்வர் பேட்டி முதல்பக்கத் தொடர்ச்சி...

இருந்து மீட்டுள்ளோம். கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தின்படி பணி நியமனம், பெண் அர்ச்சகர்கள் - பெண் ஓதுவார்கள் நியமனம் என இந்து மதக் கோயில்களை புனரமைத்து, பக்தர்களுக்கு வசதிகளைப் பெருக்கித் தந்திருக்கிறோம். தேரோட்டம் உள்ளிட்ட கோயில் விழாக்கள் அந்தந்த திருக்கோயில்களின் நடைமுறைப்படி நடத்தப்படுகின்றன. இது தான் தமிழ்நாட்டில் உள்ள பொதுமக்களின் பார்வையாகவும் உள்ளது.

**கேள்வி:-** *உங்கள் கட்சி இந்தியா கூட்டணியில் ஓர் அங்கமாக இருக்கிறது. காங்கிரஸ் மற்றும் பிற கூட்டணிக் கட்சியினர் உங்கள் தலைவர்களிடம் சனாதனம் பற்றிப் பேசுவதைத் தவிர்க்குமாறு வேண்டுகிறார்கள். இருந்தும் உங்கள் கட்சியினர் அப்படி நடந்துகொள்வதாகத் தெரியவில்லையே?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** தோழமைக் கட்சியினரின் கருத்துகளையும் உணர்வுகளையும் மதிக்கின்ற இயக்கம் தி.மு.கழகம். அதனால் இது பற்றி உரிய விளக்கமும் தரப்பட்டு, அவர்களின் வேண்டுகோளும் கடைப்பிடிக்கப்படுகிறது. இதை வைத்து, இந்தியா கூட்டணிக்கு எதிராக அரசியல் செய்யலாம் என்று நினைப்பவர்களின் எண்ணம் நிறைவேறப் போவதில்லை.

**கேள்வி:-** *அண்மைக்காலங்களில், ராஷ்ட்ரிய ஜனதா தளம், சமாஜ்வாதி கட்சி உள்ளிட்ட மாநிலக் கட்சிகளின் தலைவர்களும் இந்துத்துவத்தை வேறு சொற்களில் விமர்சித்துள்ளனர். 2024 தேர்தலின் மையப்பொருளாக ’முற்பட்ட சாதிகள் எதிர் பிற்படுத்தப்பட்ட சாதிகள்’ என்பதை முன்னிறுத்த உங்கள் கூட்டணிக்கட்சியினர் முயல்வதாகக் கூறப்படுகிறது. அதுபற்றிய உங்கள் கருத்து என்ன?*

**ஆதாயம் தேடும் அரசியலை ஒருபோதும் விரும்புவதில்லை!**

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** எந்த ஒரு சமுதாயத்தையும் இன்னொரு சமுதாயத்திற்கு எதிராக நிறுத்தி ஆதாயம் தேடும் அரசியலை நாங்கள் ஒரு போதும் விரும்புவ தில்லை. தி.மு.க அங்கம் வகித்த தேசிய முன்னணி அரசில் பிரதமர் வி.பி.சிங் அவர்கள், இதர பிற்படுத்த வகுப்பினருக்கு ஒன்றிய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 27% இடஒதுக்கீட்டினைக் கொண்டு வந்தார். அதன் எதிரொலியாக, வட மாநிலங்களில் சமூகநீதி பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. தேசிய அரசியல் கண்ணோட்டத்தில் இருந்த பல தலைவர்கள் அவரவர் மாநிலங்களுக்கான அரசியல் இயக்கத்தைத் தொடங்கினர்.

காலம் காலமாக உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு உரிமைகள் தரப்பட வேண்டும், மாநிலங்கள் சமமாக நடத்தப்பட வேண்டும், நாட்டின் வளர்ச்சியும் ஜனநாயகத் தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் 2024 தேர்தலை இந்தியா கூட்டணி எதிர்கொள்ளவிருக்கிறது.

**இருமொழிக் கொள்கை வாயிலாக பல படிகள் முன்னேறியிருக்கிறோம் - எனவே தமிழ்நாட்டிற்கேற்ற தனித்துவமான கல்விக் கொள்கையை வகுத்து வருகிறோம்!**

**இலவசம் என்று மலிவாகச் சொல்வது தவறு! அனைத்தும் சமூகநலத் திட்டங்கள்தான்!**

**கேள்வி:** *இலவசத் திட்டங்கள் குறித்து அதிகம் விவாதிக்கப்பட்டு வருகிறது. உச்சநீதிமன்றமே கூட இதுபற்றி சில கருத்துகளைக் கூறியுள்ளது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இலவசம் என்று மலிவாக வரையறுக்கப்படுவதை நாங்கள் ஒருபோதும் ஏற்பதில்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஒவ்வொரு திட்டமும் சமூகநலத் திட்டங்கள்தான். அந்தத் திட்டங்கள் ஒவ்வொரு காலகட்டத்திற்கேற்ப நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவை அந்தந்தக் காலகட்டத்தில் மக்களை ஒரு படியேனும் மேலே உயர்த்துகின்றன.

விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் வேளாண் குடிகளைக் காப்பாற்றியது, மாணவர்களுக்கான இலவச பஸ் பாஸ் ஒரு தலைமுறையின் பள்ளிக் கல்வியை நிறைவு செய்ய வைத்தது, பட்டதாரிகளுக்கான கட்டணமில்லாக் கல்வி, உயர்கல்வி கற்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல ஊதியத்துடன் கூடிய வேலையைக் கிடைக்கச் செய்தது. கலர் டி.வி, கேஸ் அடுப்பு போன்றவை பெண்கள் எந்நேரமும் அடுப்படியில் இருக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து மீட்டு, வெளியுலகத்தைக் காணச் செய்தன. இவற்றை இலவசம் என்று சொல்வது தவறு. பிரதமர் மோடியே கூட, நீங்கள் குறிப்பிடும் இலவசத் திட்டங்கள் பலவற்றை அறிவித்திருக்கிறார்.

**ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்கவே காலை உணவுத் திட்டம்!**

**கேள்வி:-** *பள்ளிகளில் காலைச்சிற்றுண்டித் திட்டம் தொடங்கியிருக்கிறீர்களே?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** குழந்தைகள் காலை உணவு சாப்பிட முடியாமல் பள்ளிக்கு வருவதை நான் சில பள்ளிகளில் நேரில் ஆய்வு செய்து தெரிந்துகொண்டேன். சாப்பிடாமல் வரும்போது, பாடம் என்பது அவர்களுக்கு சுமையாக மாறிவிடுகிறது. களைப்பும் சோர்வும் ஏற்படுவதுடன், உடல்நலக் குறைபாடுகளும் உருவாகின்றன. எனவே, எதிர்காலத் தலைமுறை ஆரோக்கியமான தலைமுறையாக வளரவேண்டும், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவுதான் காலை உணவுத்திட்டம். அதனால்தான் பிற மாநிலங்களும் தமிழ்நாட்டைப் பின்பற்றுகின்றன.

### உதயநிதியின் கருத்தை திரித்துப் பரப்பிய பா.ஜ.க.!

**சாதி ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதை, இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதாக பா.ஜ.க.வின் ஐடி விங் பொய்யாகப் பரப்பியது. அதே போல ‘ஜெனோசைட்’ என்ற சொல்லையும் உதயநிதி பயன்படுத்தவில்லை. பா.ஜ.க. ஆட்சியில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு எந்த சாதனையும் இல்லை. 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கான ஊழல்கள்தான் வெளிப்பட்டுள்ளன. இந்த ஊழல்களுக்கு பதில் சொல்ல முடியாத பா.ஜ.க அரசு - ஊழல்களைச் சுட்டிக்காட்டிய சி.ஏ.ஜி அதிகாரிகளை மாற்றி இருக்கிறது. இவற்றைத் திசைத்திருப்ப உதயநிதி பேச்சை சர்ச்சையாக்கி உள்ளார்கள்.**

**கேள்வி:-** *பிரதமர் மோடியை எதிர்கொள்வதற்கு ஏற்ற வலிமையான தலைவராக உங்கள் இந்தியா கூட்டணியில் யாரைக் கூறுவீர்கள்?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** இந்தியாவை இந்தியா கூட்டணி மீட்கும். இந்தியா என்ற பெயரைக் கேட்டாலே நடுங்கும் நிலையில்தான் பாஜக இருக்கிறது. பிறகெதற்கு யார் வலிமையான போட்டியாளர் என்ற கேள்வி. இந்தியா கூட்டணி என்பது தலைவர்களும் கட்சிகளும் மட்டும் இடம்பெற்றுள்ள கூட்டணி அல்ல. இந்திய மக்களின் ஒருங்கிணைந்த கூட்டணி. அவர்கள், ஜனநாயக விரோத மதவாத அரசியல் செய்யும் பா.ஜ.க.வை விரட்டும் வலிமை கொண்டவர்கள். யார் ஆட்சிக்கு வரவேண்டும் என்பதைவிட யார் ஆட்சிக்கு வரக்கூடாது என்பதில் இந்தியா கூட்டணி யினரும் இந்திய மக்களும் தெளிவாகவே இருக்கிறோம்.

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர்

## கே.எஸ்.அழகிரி பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, அக். 23-

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி பிறந்த நாளையொட்டி, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூகவலைதளப்பதிவு வருமாறு:-

அருமைச் சகோதரர் - தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

மதச்சார்பின்மை, மனித நேயத்தை மையப்படுத்தியதம் அரசியல் பயணத்தில் அவர் நல்ல உடல் நலத்துடன் பல்லாண்டு வாழவாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

## 9துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு

*சென்னை, அக். 23-*

*வங்கக்கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, சென்னை, கடலூர், நாகப்பட்டினம் துறைமுகங்களில் இரண்டாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.*

*எண்ணூர், காட்டுப்பள்ளி, புதுச்சேரி, காரைக்கால், பாம்பன், மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களில் ஒன்றாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது.*

---

## பாலஸ்தீன மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அனுப்பிய இந்தியா!

### எகிப்து எல்லை வழியாக காசாவுக்கு அனுப்பியது!

*காசா, அக்.23-*

*பாலஸ்தீன மக்களுக்காக மருந்துகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை இந்திய அரசு அனுப்பி வைத்துள்ளது.*

*பாலஸ்தீனத்தின் காசா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் படையினருக்கும், இஸ்ரேல் ராணுவத்திற்கும் இடையே கடந்த 7ம் தேதி முதல் கடுமையான போர் நடந்து வருகிறது.*

*இப்போரில் காசாவில் 4 ஆயிரத்து 385 பாலஸ்தீனர்கள் பலியாகி உள்ளனர். இதில், ஆயிரத்து 756 பேர் குழந்தைகள், 967 பேர் பெண்கள். காசாவை முழுமையாக இஸ்ரேல் முற்றுகையிட்டு, தொடர்ந்து வான்வழி தாக்குதல் நடத்தி வருவதால், லட்சக்கணக்கான பாலஸ்தீனர்கள் வீடுகளை இழந்து, உணவு, குடிநீர் இன்றி தவிக்கின்றனர். மருத்துவமனைகளில் மருந்து, மின்சாரம் இன்றி கடும் இன்னலை சந்திக்கின்றனர். இதற்கிடையே, ஐநாவின் முயற்சியினால் முதல் முறையாக காசாவிற்குள் நிவாரண உதவி பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. இந்நிலையில், ஆறரை டன் மருந்துகள் மற்றும் 32 டன் நிவாரணப் பொருட்களை பாலஸ்தீன மக்களுக்காக இந்திய அரசு அனுப்பி உள்ளது.*

*உத்தரப்பிரதேசத்தின் காசியாபாத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் எகிப்து சென்று, பின்னர் அங்கிருந்து எகிப்து எல்லையை ஒட்டிய ரபா கிராசிங் வழியாக நிவாரணப் பொருட்கள் காசாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.*

---




கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி டிசம்பர் 17ஆம் தேதி சேலத்தில் நடைபெற உள்ள இளைஞர் அணி மாநில மாநாடு, கழக இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் குறித்து மேலூரில் நடைபெற்ற இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் ஆனந்த், கழக நிர்வாகிகள் முகமது யாசின், பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், நேருபாண்டியன், சசிக்குமார், மருதுபாண்டியன் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள், இளைஞர் அணியினர், கழகத்தினர் உள்ளனர்.

---

தொகுதி பார்வையாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் பங்கேற்பு! நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி ஏற்பாட்டில்

## ஆவடி தொகுதிக்குட்பட்ட திருவேற்காட்டில் பாக முகவர்கள் ஆய்வுக் கூட்டம்!

### மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது!

*திருவள்ளூர், அக். 23*

*திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு நகரத்திற்கு உட்பட்ட 1,2,3,4,9,10,11,12,13,14,15,16,17,18 ஆகிய வார்டுகளில் உள்ள பாக முகவர்கள் பி.எல்.ஏ. 2 பாக அளவிலான பி.எல்.சி. ஆய்வு கூட்டம் முன்னாள் அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் தலைமையில் நகரச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி ஏற்பாட்டில் கோலடி சாலையில் உள்ள தனியார் திருமணம் மண்டபத்தில் நடைபெற்றது.*

*இக் கூட்டத்தில் வட்ட செயலாளர்கள் பொன். மனோகரன், சத்தியகிரி, டி.குமார், கே.பி.எஸ் சுதாகர், பி.உமாபாதி, பி.கேஜெ, துரைகோபால், பரிசுமுத்து, டி.வி.இளங்கோ, பி.வி.கே. கண்ணன், எம்.காந்தி, பா. பன்னீர்செல்வம், சாது, ஜெகன் முன்னிலை வகித்தார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் ஆவடி தொகுதி பார்வையாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பெ. வினோத் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டு வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் பணிகள் குறித்து பாகம் முகவர்கள் எப்படி பணிகளை மேற்கொள்வது என்பது குறித்து ஆலோசனைகளை வழங்கப்பட்டது மற்றும் கூட்டத்தின் நிறைவாக முன்னாள் திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைந்த மாவட்ட கழக செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வேணு மறைவையொட்டி திருவேற்காடு நகர திமுக சார்பில் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.*

*இதில் நகர நிர்வாகிகள் குமாரசாமி, நடராஜ், ஜெ. சரவணன், ஜெ.பாண்டு ரங்கன், இ.செல்வதுரை, கே. கே.ஆர்.கிருஷ்ணகுமார், மற்றும் வழக்கறிஞர்கள் டி.ராஜ்குமார், எஸ்.ராஜேந்திரன், மது, மணி, முத்துவேலன், கார்திகேயன், கண்ணன், வசந்த் குமார், சுரேஷ், நிர்வாகிகள் குருநாதன், சாந்திராஜா, ஆசைதம்பி, பி.ஜி.எம்.விநாயகம், என்.ராஜி, நாராயணன், நரேஷ்,ராஜேஷ் உள்பட பலர் கலந்துகொண்டனர்.*

---

அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்!

## சைதை மேற்குப் பகுதிக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. வேண்டுகோள்!

*சென்னை, அக்.23-*

*சைதை மேற்குப் பகுதி கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (23.10.2023) அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையில் நடைபெற உள்ளது. மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைகள் வழங்க உள்ளார்.*

*இதுகுறித்து பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்குப் பகுதி கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (23.10.2023, திங்கட்கிழமை) மாலை 5 மணியளவில் சைதாப்பேட்டை பெருமாள் கோயில் தெருவில் உள்ள விஜயராகவலு திருமண மண்டபத்தில் பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையிலும் பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பகுதி துணைச் செயலாளர்கள் த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதா கௌதமன், பொருளாளர் வி.பி.ஜானகிராமன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.*

*இக்கூட்டத்திற்கு சென்னை தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்க உள்ளார்.*

*எனவே, இக்கூட்டத்திற்கு சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்துக் கொண்டு இக்கூட்டத்தினை சிறப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்: 1) 28.10.2023 (சனிக்கிழமை) அன்று நடைபெற உள்ள கலைஞர் நூற்றாண்டு சிறப்பு வேலை வாய்ப்பு முகாம். 2) நீட்டுக்கு எதிராக கையெழுத்து வாங்குவது குறித்து.3) கழக ஆக்கப் பணிகள்*

*இவ்வாறு எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. தெரிவித்துள்ளார்.*



காஞ்சிபுரம்வடக்குமாவட்டம்திருப்போரூர்பேரூர்கழகம்சார்பில்தலைவர்கலைஞர்நூற்றாண்டுவிழாப்பொதுக்கூட்டம் நேற்று (22.10.23) நடைபெற்றது. பேரூர் கழக செயலாளர் மு.தேவராஜ் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர் பவானி கண்ணன் கலந்துகொண்டு பேசினார். இதில் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன், பேரூர் கழக நிர்வாகிகள் எஸ்.அஸ்கர் அலி, வி.சந்திரன், ஆர்.பரசுராமன், ஜி.வாணி, எஸ்.ஏழுமலை, கே.பாலசுப்பிரமணியன், ஆர்.பவித்ரா, ஒய்.மோகன், எஸ்.பாலகிருஷ்ணன், டி.டி.சேகர் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி உள்ளிட்ட அனைத்து அணி நிர்வாகிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலையில் - வடக்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள்

# பயிற்சிப் பாசறைக் கூட்டம்: தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சிப் பேருரை!

### கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையுரை! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எ.வ.வேலு வரவேற்றுப் பேசினார்!

திருவண்ணாமலை, அக். 23-

திருவண்ணாமலையில் தி.மு.க. வடக்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் மிகுந்த எழுச்சியுடன் தொடங்கி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சிப் பேருரையாற்றினார்.

கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தலைமையுரையாற்றினார். மாவட்டச் செயலாளர், அமைச்சருமான எ.வ.வேலு வரவேற்புரை நிகழ்த்தினார்.




திருவண்ணாமலை மாவட்டத்திற்கு - வடக்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வருகை தந்த கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பொதுமக்கள் – கழகத்தினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க. வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கென ஒரு நாள் பயிற்சி பாசறைக் கூட்டம் மண்டல வாரியாக நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, கடந்த ஜூலை 26ஆம் தேதி திருச்சியில், டெல்டா மண்டலத்துக்கான பயிற்சி பாசறைக் கூட்டம் நடத்தப்பட்டது. அதன்பின்னர் ஆகஸ்ட் 17 ஆம் தேதி தென் மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டம் ராமநாதபுரத்தில் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து மேற்கு மண்டல பயிற்சிப் பாசறைக் கூட்டம் செப்டம்பர் 24ஆம் தேதி திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

இந்நிலையில், வடக்கு மண்டலத்திற்கான வாக்குச்சாவடி பொறுப்பாளர்களின் பயிற்சிப் பாசறைக் கூட்டம் திருவண்ணாமலை ஒன்றியத்திற்கு உட்பட்ட மலப்பாம்பாடி ஊராட்சி அருணாச்சலம் நகர் கலைஞர் திடலில் எழுச்சியுடன் தொடங்கி நடைபெற்றது.

திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, கள்ளக் குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பத்தூர், ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு ஆகிய 13 மாவட்டங்களின் வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பங்கேற்றுள்ளனர்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

தி.மு.கழகப் பொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் தலைமையுரை நிகழ்த்தினார். திருவண்ணாமலை தெற்கு மாவட்டச் செயலாளரும், பொதுப் பணித்துறை அமைச்சருமான எ.வ. வேலு வரவேற்புரை நிகழ்த்தினார்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன் நன்றியுரை ஆற்றினார். வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் குறித்து தி.மு.க. வழக்கறிஞர் அணி செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான என்.ஆர். இளங்கோ உரையாற்றினார். செயலி மற்றும் கணக்கெடுப்பு பணிகள் குறித்து வேலூர் மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமாரும், சமூக வலைத்தளங்கள் பயன்பாடு மற்றும் செயல்படுத்த வேண்டிய முறைகள் குறித்து தி.மு.க. பொறியாளர் அணிச்செயலாளர் எஸ்.கே.பி.கருணாவும் உரையாற்றினர்.

திராவிட மாடல் அரசின் மக்கள் நலன் காக்கும் சமூக நலத் திட்டங்கள் குறித்து தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளரும், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவருமான திண்டுக்கல் ஐ.லியோனி, மருத்துவ அணிச்செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ. ஆகியோர் உரையாற்றினர்.

---

### நாளை (24ஆம் தேதி) திருப்பத்தூரில்

# மாமன்னர் மருது பாண்டியர்கள் 222வது ஆண்டு நினைவு நாள்!

### அரசின் சார்பில் கே.ஆர். பெரியகருப்பன் - கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் உள்பட அமைச்சர்கள் மரியாதை!

சிவகங்கை, அக். 23-

சிவகங்கையை ஆட்சி புரிந்தவர்கள் மாமன்னர் மருது பாண்டியர்கள் . நாட்டின் சுதந்திரத்திற்காக போராடியதில் ஆங்கிலேயர்களால் திருப்பத்தூரில் அக்டோபர் 24ம்தேதி இதே நாளில் 221 ஆண்டுகளுக்கு முன் தூக்கிடப்பட்டார்கள் அவர்களது நினைவினைப் போற்றி பாராட்டும் வகையில் ஆண்டுதோறும் அரசின் சார்பில் அக்டோபர் 24ம்தேதி திருப்பத்தூரில் அரசின் சார்பில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு நாளை 24ம்தேதி திருப்பத்தூரில் உள்ள மருது பாண்டியர் நினைவிடத்தில் உள்ள மாமன்னர் மருது பாண்டியர்கள் சிலைகளுக்கும், மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட இடத்திலும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன், ,கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன்,தங்கம்தென்னரசு, ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், பி.மூர்த்தி,பி.டி. ஆர்.பழனிவேல்தியாகராஜன், ஆகியோர் காலை 9=00மணி அளவில் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்துகிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள். அதை தொடர்ந்து மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் பூக்கடை பாண்டி ஏற்பாடு செய்துள்ள அன்னதானத்தினை தொடங்கி வைக்கிறார்கள். முன்னதாக காலை 8 மணி அளவில் கலெக்டர் ஆஷா அஜித் தேசிய கொடியை ஏற்றி வைக்கிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் சண்முகசுந்தரம் தலைமையில் துறை அலுவலர்கள் செய்து வருகிறார்கள்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு – தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! எஸ்.முரளி தலைமை!

# கலைஞர் நூற்றாண்டு விழா! 20 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் திருமணம்!

### அமைச்சர் எ.வ.வேலு திருமணத்தை நடத்தி வைக்கிறார்!

சென்னை, அக்.23

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் துறைமுகம் மேற்குப் பகுதியில் கலைஞர் 100, 51-வது நிகழ்ச்சியாக "இதயமும் இதயமும் இணையட்டும், எதிர்காலம் கலைஞரை புகழட்டும்" எனும் தலைப்பில் 25.10.2023 புதன்கிழமை காலை 8.00 மணியளவில் சென்னை 1, பாரிமுனை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் 20 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் திருமணத்தை நடத்தி வைக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் துறைமுகம் மேற்குப் பகுதி செயலாளர் எஸ்.முரளி தலைமை வகிக்க, சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன், எம்.பி. க.பிரபு, எஸ்.ராஜசேகர், இசட். ஆசாத், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, பி. ஸ்ரீராமுலு, பா.ஜெகதீஷ், எம். விநாயகம், பி.விஜயகுமார், மே. ஜனார்த்தனன், ம.முத்துகுமார், ஆர்.கலைச்செல்வி, எம்.இ.கனி, பூங்கா நகர் கண்ணன், ஆர்.பி. ரமேஷ், எல்.சம்பத்குமார், பா.பிரதீப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்,

கே.ஆர்.அபரஞ்சி, ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ. தமிழ்வாணன், வெ. சந்தான லட்சுமி, சி.ப.ஜெயராமன், சேப்பாக்கம் வே.பிரபாகரன், மா.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர்.ரவிசந்திரன், ஜி.இராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சத்தீஷ்குமார், எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா. பார்த்தீபன், கே.கவியரசு ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இத்திருமண விழாவில் திருவண்ணாமலை மாவட்ட செயலாளர் பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு 20 இணையர்களுக்கு சீர்வரிசையுடன் திருமணத்தை நடத்தி வைக்கிறார்.

மேலும், இத்திருமண நிகழ்ச்சியில் மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், இ.பரந்தாமன் மற்றும் ப.ரங்கநாதன், மாநில நிர்வாகிகள் கே.எஸ். ரவிசந்திரன், தமிழன் பிரசன்னா, கே.சந்துரு, பி.கே. மூர்த்தி, சங்கரிநாராயணன், எஸ்.மணிமுடி, கே.எஸ். எம்.நாதன், வே.உமாகாந்த்,

பரிதிஇளம்சுருதி, கோ. ஏகப்பன், தேவஜவகர், எ. புனிதவதி எத்திராசன், கூ. பி.ஜெயன், சரிதா மகேஷ்குமார், சொ.வேலு, டாக்டர் சாந்தகுமாரி, பகுதிக் கழக செயலாளர்கள் ஐ.சி. எப்.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி.இராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், செ.தமிழ்வேந்தன், எம். சாமிகண்ணு, வி.சுதாகர், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின், எல். நவீன், வெ.பரிமளம்,

பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயகுமார், ரமேஷ் (எ) நீலகண்டன், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், டாக்டர் எ.பி.பூர்ணிமா, அ.நிர்மலாதேவி, டி. லோகேஷ், கே.கோகுல், ஆர்.எஸ்.சித்திக், ஜெ.பாலமுருகன், வானவில் விஜய், நா.துலுக்காணம், எல்.பி.எப். மோகன், துரைகண்ணன், ஜி.தாமோதரன், எம். பெரோஸ்கான், சுதாதீன தயாளன், எம்.சி,ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, 59 வது.வட்டக்கழக நிர்வாகிகள்: எஸ். ஜி.விஜயன், கே.கார்த்திக், எஸ்.கிருஷ்ணன், ஆர்.ஜெயலட்சுமி, டி. ரமேஷ், ச.ப.சந்திரசேகர், ஜி.எஸ்.கணேசன், ச.பன்னீர்செல்வம், எம். செல்வராஜன், ஆர்.அய்யனார் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

வட்ட செயலாளர் டி.சத்தீஷ்குமார் நன்றியுரையாற்றுகிறார்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மாணவ மாணவியர்களுக்கான கட்டுரைப் போட்டி விழா அயனாவரம் தனியார் பள்ளியில் மாணவரணி அமைப்பாளர் வானவில் விஜய் தலைமையில் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. வெற்றியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் பரிசுகளை வழங்கினார்கள். அருகில் பகுதிச் செயலாளர் வே. வாசு மண்டல குழு தலைவர் கூ.பி. ஜெயின், கவுன்சிலர் டி.வி. செம்மொழி, எம். சுரேஷ், மோகன் ஆகியோர் உள்ளனர்.

---



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கான நேர்காணல்

### இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

ஒன்றிய – நகர – பகுதி – பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன. அவற்றில் மண்டலம்–6, மண்டலம்–8 மற்றும் மண்டலம்–9–ல் உள்ள மாவட்டக் கழகங்களில் மேற்கண்ட பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் கீழ்க்கண்டவாறு நடைபெறுகின்றது. விண்ணப்பித்தவர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | கழக மாவட்டம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1 | திருச்சி மத்திய | 25.10.2023 | காலை 9.00 மணி | கலைஞர் அறிவாலயம், திருச்சி |
| 2 | திருச்சி வடக்கு | 25.10.2023 | மதியம் 12.00 மணி | |
| 3 | திருச்சி தெற்கு | 25.10.2023 | மதியம் 3.00 மணி | |
| 4 | திண்டுக்கல் கிழக்கு | 26.10.2023 | காலை 9.00 மணி | சித்தாரா மஹால், நத்தம் சாலை, திண்டுக்கல். |
| 5 | திண்டுக்கல் மேற்கு | 26.10.2023 | மதியம் 2.00 மணி | |
| 6 | தேனி வடக்கு | 27.10.2023 | காலை 10.00 மணி | கிரீன் ராயல் ரிசார்ட், மூனாறு மெயின்ரோடு, போடிநாயக்கனூர். |
| 7 | தேனி தெற்கு | 27.10.2023 | மதியம் 12.00 மணி | |
| 8 | மதுரை மாநகர் | 31.10.2023 | காலை 9.00 மணி | ஆளாத்தூர் பி.ஆர். மஹால், மதுரை. |
| 9 | மதுரை வடக்கு | 31.10.2023 | மதியம் 12.00 மணி | |
| 10 | மதுரை தெற்கு | 31.10.2023 | மதியம் 3.00 மணி | |
| 11 | சிவகங்கை | 01.11.2023 | காலை 9.00 மணி | இராஜேஷ்வரி மஹால் பர்மா காலனி, காரைக்குடி. |
| 12 | ராமநாதபுரம் | 01.11.2023 | மதியம் 2.00 மணி | பீமாஸ் வைஸ்ராய் மஹால், பாரதி நகர். இராமநாதபுரம். |
| 13 | விருதுநகர் தெற்கு | 02.11.2023 | காலை 9.00 மணி | சரஸ்வதி கிராண்ட் (கந்தசாமி இராஜம்மாள்) திருமண மண்டபம். அருப்புக்கோட்டை ரோடு, விருதுநகர். |
| 14 | விருதுநகர் வடக்கு | 02.11.2023 | மதியம் 12.00 மணி | |
| 15 | தூத்துக்குடி வடக்கு | 03.11.2023 | காலை 9.00 மணி | கலைஞர் அரங்கம், தூத்துக்குடி. |
| 16 | தூத்துக்குடி தெற்கு | 03.11.2023 | மதியம் 2.00 மணி | சத்யா மஹால், புதுக்கோட்டை, துத்துக்குடி. |
| 17 | தென்காசி தெற்கு | 04.11.2023 | காலை 9.00 மணி | சேனைத்தலைவர் மாளிகை, ஐந்தருவி சாலை, குற்றாலம். |
| 18 | தென்காசி வடக்கு | 04.11.2023 | காலை 11.00 மணி | |
| 19 | திருநெல்வேலி மத்திய | 04.11.2023 | மதியம் 2.00 மணி | வீரபாண்டியன் மஹால் (கோபாலசாமி கோவில் அருகில்) பாளையங்கோட்டை. |
| 20 | திருநெல்வேலி கிழக்கு | 04.11.2023 | மாலை 4.00 மணி | ஹோட்டல் அப்பனா பார்க், 5, பைபாஸ் ரோடு, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி |
| 21 | கன்னியாகுமரி கிழக்கு | 05.11.2023 | காலை 9.00 மணி | மாவட்டக் கழக அலுவலகம், ஒழுகினச்சேரி, நாகர்கோவில். |
| 22 | கன்னியாகுமரி மேற்கு | 05.11.2023 | மதியம் 12.00 மணி | வசந்த மாளிகை ஆடிட்டோரியம், சாமியார் மடம் கன்னியாகுமரி. |

நேர்காணலில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான புகைப்படத் தொகுப்பு மற்றும் ஆவணங்களைக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 22–10–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

# 'நீட்' விலக்கை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம்!



கழக இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணி, இணைந்து நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் கடலூர் மேற்கு மாவட்டத்தில், நெய்வேலி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது.கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கலந்து கொண்டு கையெழுத்து இயக்கத்தினை துவக்கிவைத்து,தொகுதிவாரியாக கையொப்பம் படிவத்தினை வழங்கினார்.நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன்,மாவட்ட கழக பொருளாளர் ஜி தண்டபாணி, மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆர் .எஸ்.எம். தணிக்கை செல்வம், ஆனந்தி சரவணன் , தலைமை செயற்குழு உறுப்பினர் சா.இராசவன்னியன், வி .கே. வெங்கட்ராமன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ். கணேஷ்குமார், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சி.வெ.க.வெங்கடேசன்,இளைஞரணிதுணை அமைப்பாளர்கள் ராஜேஷ் , துரைராஜ், நாராயணசாமி, சதாம்,மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ராஜேஷ்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் சதீஷ்,துணை அமைப்பாளர் செல்வமணி,நகர மன்ற தலைவர்கள் இராஜேந்திரன், ஜெயந்தி இராதாகிருஷ்ணன், தொ.மு.ச. பொதுச்செயலாளர் என்.பாரி,பொருளாளர் ஆர். ஐயப்பன்,அலுவலக செயலாளர் ஆர்.ஜெரால்டு,மற்றும் நெய்வேலி, விருத்தாசலம், திட்டகுடி ,பண்ருட்டி தொகுதிகளின், இளைஞரணி, மாணவர் அணி, மருத்துவ அணி, அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், அனைவரும்கலந்து கொண்டார்கள்,



சிவகங்கையில் மாநில இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் உத்தரவின்பேரில் நீட்தேர்வுவிலக்கு கோரி குடியரசு தலைவருக்கு அஞ்சல் அட்டை அனுப்பவும் கையெழுத்து இயக்கத்தினை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர்சபாபதிமோகன் முன்னிலையில் துவக்கிவைத்தார்.உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனிசெந்தில்குமார்,மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன்,கே.எஸ்.எம்.மணிமுத்து உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




நாமக்கல் மேற்கு திருச்செங்கோட்டில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற கோஷத்தை முன்னிறுத்தி நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் தா.கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் வட்டூர் ஜி. தங்கவேல், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி மருத்துவ அணி மாணவர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் 500 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி நெல்லை கிழக்கு மாவட்டம் வள்ளியூர் பி.ஆர் மகாலில் இளைஞர் அணி, மாணவர் அணி,மருத்துவ அணி சார்பில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை பிரச்சார குழு செயலாளர் (மகளிர் அணி) சேலம் சுஜாதா துவக்கி வைத்தார். நிகழ்வில் இளைஞர் அணி அமைப்பாளர் ஜான் ரபீந்தர்,மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மருத்துவரணி அமைப்பாளர் கார்த்திக் குமார், ஞானதிரவியம் எம்.பி ஆ.பிரபாகரன்,கிரகாம்பெல்,ஜார்ஜ் கோசல்,நம்பி,ஜெகதீஷ்,செல்வக கருணாநிதி,ஜோசப் பெல்சி,செல்வ சூடாமணி,தமிழ்வாணன்,ஜான் கென்னடி உள்பட கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி நீட் தேர்வினை ரத்து செய்திட ஒன்றிய அரசினை வலியுறுத்தி தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி,மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் ஏ.வி. ஆர்.எம்.வி.மண்டபத்தில் நடைபெற்ற மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ முன்னிலையில் த.மு.எ.க.ச. மாநில துணை செயலாளர் முனைவர் செ.சுந்தரவள்ளி துவக்கி வைத்தார்.நிகழ்வில் இளைஞர் அணி அமைப்பாளர் முகேஷ்,மாணவரணி அமைப்பாளர் உதயகுமார், மருத்துவ அணி அமைப்பாளர் மணிகண்டன்,தங்கவேலு, சீனிவாசன்,பரமகுரு,சரவணன், உள்பட கழக நிர்வாகிகள் கழகத்தினர் உள்ளனர்.



உடல்நலக் குறைவால் மறைவெய்திய திருவள்ளூர் மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் கும்முடிபூண்டி கி.வேணு உடலுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இதில் அமைச்சர் ஆர்.காந்தி, தயாநிதிமாறன் எம்.பி., முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில்

# பயன் பெறுவோரின் தரவுகள் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும்!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக். 23-

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெறுவோரின் தரவுகள் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும் என்றும் ஒவ்வொரு ஆண்டின் காலாண்டு மற்றும் அரையாண்டு காலங்களில் பரிசீலனை செய்யப்பட்டு, திட்டப் பயனாளிகளின் தகுதி உறுதிப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அரசாணையின் படி, தற்போது, கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகள் உள்ளனர். ஒவ்வொரு ஆண்டின் காலாண்டு அரையாண்டு காலங்களில் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது தகுதி உறுதிப்படுத்தப்படும். வருமான வரித் துறை, மின்சார வாரியம் உள்ளிட்ட பல்வேறு தரவுகளின் அடிப்படையில் சிறப்பு திட்ட அமலாக்கத் துறை இந்த பரிசீலனையை மேற்கொள்ளும்.

இறப்புப் பதிவு, ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனித வள மேலாண்மை தரவுகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், வாரியங்களின் பணியாளர்கள் பற்றிய தரவுகள், சமூகப் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதியத் தரவுகள், அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரிய தரவுகள், வருமானச் சான்று தரவுகள், நான்கு சக்கர கனரக வாகனங்கள் பதிவு செய்யப்பட்ட தரவுகள் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படும்.

மேலும், பொது விநியோக திட்டம் தொடர்பான தரவுகள், சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தப்பட்ட விவரங்கள், நில உடமை தொடர்பான தகவல் தளங்கள் மூலம் காலாண்டு அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படும். இதேபோல், தொழில் வரி செலுத்தப்பட்ட தரவுகள், மின்சாரப் பயன்பாட்டு தரவுகள் அரையாண்டு முறையில் சரிபார்க்கப்படும். மேலும், வருமான வரி செலுத்தப்பட்ட தாக்கல் செய்யப்பட்ட தரவுகள், சொத்து வரி குறித்த தரவுகள் ஆண்டு தோறும் சரிபார்க்கப்படும். இத்தகவல்கள் அடிப்படையில் கலைஞர் மகளிர் உரிமைத்திட்ட பயனாளிகளின் பட்டியல் புதுப்பிக்கப்படும் என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 4வது மண்டல பேச்சு போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என். ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் மதுரை சட்டக் கல்லூரியில் 21.10.2023 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத்தொகை, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இதில் சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ராதாகிருஷ்ணன்; துணை செயலாளர் பச்சையப்பன்; தலைமை கழக வழக்கறிஞர்கள் சரவணன், பா.கனேசன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவசேநன் தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமை கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றிகொண்டான், நன்மாறன் கலந்துகொண்டனர்.

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு

# பேரிடர் மீட்புக் குழுக்கள்!

சென்னை, அக்.23-

வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில், கனமழை, புயல், வெள்ளம், சூறாவளி காற்று என இயற்கை பேரிடர் ஏற்பட்டால் பொது மக்களை பாதுகாக்கவும், மீட்பு மற்றும் நிவாரண பணிகள் மேற்கொள்ளவும், சென்னை பெருநகர காவல், 12காவல் மாவட்டங்களில் பேரிடர் மீட்புகுழுக்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

ஒவ்வொரு மீட்பு குழுவும் ஒரு தலைமைக்காவலர் தலைமையில் 10காவல் ஆளிநர்கள் இருப்பர். ஒவ்வொரு மீட்பு குழுவுக்கும் மீட்பு பணிகளுக்காக தலா ஒரு வாகனம் என 12 வாகனங்களும்.

ரப்பர் படகு, மிதவை ஜாக்கெட்டுகள், கயிறு, உட்பட 21 மீட்பு உபகரணங்கள் வழங்கப் பட்டுள்ளன. போக்குவரத்து காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் மழைநீர் தேங்கி போக்குவரத்து இடையூறு உள்ள சுரங்கபாதைகள் மற்றும் சாலைகளில் இரும்பு தடுப்புகள் அமைத்தும், மைக் மூலம் எச்சரிக்கை விடுத்தும், பொது மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் செல்லாதவாறு தடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தற்காலிக கட்டுப்பாட்ட றைகள் அமைக்கப்பட்டு, அவசர உதவி எண்களுடன் 24 மணி நேரம் சுழற்சி முறையிலும், பெருநகர சென்னை மாநகராட்சி, பொது பணித்துறை, மின்சாரத்துறை உள்ளிட்ட அரசு துறைகளுடன் மீட்பு பணிகள் மற்றும் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேரிடரின் போது பொது மக்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பலத்த காற்று அல்லது புயலின் போது விழும் அல்லது உடைந்து போகக்கூடிய மரங்கள் மற்றும் கிளைகளை வெட்ட வேண்டும். மின் கம்பங்கள் அல்லது கம்பிகளுக்கு அருகில் மரங்களை நடுவதை தவிர்க்க வேண்டும். கனமழை அல்லது இடியுடன் கூடிய மழையின் போது வெளியே செல்வதை தவிர்ப்பதுடன், கட்டாய பயணம் செய்ய வேண்டியிருந்தால், பொது போக்குவரத்து அல்லது நம்பகமான வாகனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆசிரியர் வெ.கோவிந்தன்

### அக்டோபர் 23 (2021)



ஆசிரியராயப் பணியாற்றி வந்த இவர், கழகக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டு, தனது ஆசிரியர் பணியை துறந்து, 1977ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

பேர்ணாம்பட்டு நகர பொறுப்பாளர் – பொதுக்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1989, 1996 ஆகிய இரண்டு முறை பேர்ணம்பட்டு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினர், நகர வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## வலைதளங்களில் வலம் வருவது!

#BREAKING | ஜாதிவாரி கணக்கெடுப்பு - பிரதமருக்கு முதலமைச்சர் கடிதம்




விராட் கோலி அசத்தல்:

## இந்தியா 5-வது அபார வெற்றி!

தர்மசாலா,அக்.23-

உலகக் கோப்பையின் இன்றையப் போட்டியில் இந்தியா நியூசிலாந்து அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் முதலில் ஆடிய நியுசிலாந்து அணி 274 ரன்கள் எடுத்தது.

அடுத்து களம் இறங்கிய இந்திய வீரர்கள் ரோகித் சர்மா, சுப்மன் கில் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார். சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தாலும் ஆகியோர் விராட் கோலி தன் அசத்தலான ஆட்டத்தால் 95 ரன்கள் எடுத்தார். இறுதியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் சிறப்பான வெற்றியைப் பதிவு செய்தது. மேலும், இந்த வெற்றி மூலம் இந்தியா புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

## ‘நீட்’ தேர்வை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம்!

### மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவள்ளூர், அக்.23

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதலின்படி கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி இணைந்து ‘நீட் தேர்வை ரத்துச் செய்யக்கோரி மாபெரும் கையெழுத்து இயக்கம் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் நேற்று முன்தினம் 21.10.2023 அன்று நடைபெற இருந்த நிகழ்ச்சி முன்னாள் ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட கழக செயலாளரும் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் கும்மிடிப்பூண்டி கி.வேணு மறைவையொட்டி நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது.

இந் நிலையில் நாளை (24.10.2023 - செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணியளவில் ஆவடி அடுத்த பட்டாபிராம் பகுதியில் உள்ள ஜெய்க்கிரிஸ் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கழகச் செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றுகிறார்

அதுசமயம் சட்டமன்ற உறுப்பினர் மாநில மாவட்டக் கழக நிர்வாகி கள், பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்கள், மாநகர ஒன்றியக் கழக, நகர கழக, பகுதி பேரூர்க் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி, அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. கேட்டுக்கொண்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில்

## மதுரையில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி!

### கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமை! அமைச்சர் எஸ்.ரகுபதி பரிசுகளை வழங்கினார்!

மதுரை, அக்.23-

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக சட்டத்துறை சார்பில் மதுரையில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான 4வது மண்டல பேச்சுப் போட்டி கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் மதுரை சட்டக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுத் தொகை, பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டத் துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், ராதா கிருஷ்ணன்; துணைச் செயலாளர் பச்சையப்பன்; தலைமை கழக வழக்கறிஞர்கள் சரவணன், பா.கனேசன், மதுரை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கலாநிதி, மாநகர் மாவட்ட அமைப்பாளர் தேவசேநன் தெற்கு மாவட்ட அமைப்பாளர் சிவநேசன் மற்றும் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டனர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக தலைமைக் கழக வழக்கறிஞர்கள் சூர்யா வெற்றி கொண்டான், நன்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். இப்போட்டியில் முதல் பரிசு பெற்ற காரைக்குடி அரசு சட்டக் கல்லூரி மாணவி வர்ஷாவுக்கு ரூபாய் 50,000/ தங்கப் பதக்கம், சான்றிதழ்;

இரண்டாம் பரிசு பெற்ற தேனி அரசு சட்டக் கல்லூரி மாணவி சரண்யாவுக்கு ரூபாய் 25,000/ வெள்ளிப்பதக்கம், சான்றிதழ்;

மூன்றாம் பரிசு பெற்ற தேனி தப்புக்குண்டு அரசு சட்டக் கல்லூரி மாணவர் அருண் குமாருக்கு ரூபாய் 15,000/ தாமிரப் பதக்கம், சான்றிதழ்;

ஆறுதல் பரிசு பெற்ற தேனி அரசு சட்டக் கல்லூரி மாணவர் முஹம்மது அஸ்மதுக்கு, மதுரை அரசு சட்டக் கல்லூரி மாணவி மீனாம்பிகா அவர்களுக்கு தலா ரூபாய் 5,000/ வெண்கலப் பதக்கம், சான்றிதழும் மற்றும் கலந்து கொண்ட மாணவர்களுக்குப் பாராட்டு சான்றிதழ்களையும் சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்.

இப்பேச்சு போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்ற சட்டக் கல்லூரி மாணவர்கள் டிசம்பர் 6 அன்று சென்னையில் நடைபெறவுள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்வார்கள்.

பூவிருந்தவல்லி, சித்தி புத்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான

## ரூ.100 கோடி மதிப்பிலான சொத்து ஆக்கிரமிப்பிலிருந்து மீட்பு!

சென்னை, அக்.23-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும் இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துகள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி, நேற்று முன்தினம் (21.10.2023) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், வரதராஜபுரம் சித்தி புத்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி மதிப்பீட்டிலான சொத்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், வரதராஜபுரம் சித்தி புத்தி விநாயகர் திருக்கோயிலுக்கு சொந்தமான 1.01 ஏக்கர் நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்த பி.சி.பாஸ்கர் என்பவர், அதில் அனுமதியின்றி நிரந்தர கட்டிடம் கட்டி வணிக பயன்பாட்டிற்கு வாடகைக்கு விட்டு திருக்கோயிலுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தி வந்தார். இந்த ஆக்கிரமிப்பை அகற்றிட சட்டப்பிரிவு 78 மற்றும் 79ன் கீழ் வேலூர் மண்டல இணை ஆணையரால் உத்தரவிடப்பட்டது. இந்த உத்தரவினை எதிர்த்து ஆணையர் நீதிமன்றத்தில் ஆக்கிரமிப்பாளரால் தொடரப்பட்ட மறுபரிசீலனை மனு விசாரணையின்போது இணை ஆணையரின் உத்தரவு உறுதி செய்யப்பட்டு, மறுபரிசீலனை மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த உத்தரவினையும் எதிர்த்து மேற்படி ஆக்கிரமிப்பாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டது.

மேற்படி சட்டரீதியான உத்தரவுகளை தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட உதவி ஆணையர் (கூடுதல் பொறுப்பு) திருமதி மா.ஜெயா முன்னிலையில் காவல்துறை, வருவாய் துறை மின்சாரத்துறை ஆகிய துறை அலுவலர்களின் உதவியோடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.100 கோடியாகும். இந்நிகழ்வின்போது திருக்கோயில் செயல் அலுவலர், சிறப்பு பணி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

அண்ணாநகர் தெற்கு பகுதி 106வது வட்ட பகுதி பிரதிநிதி

## கே.முகமது அலி தாயார் கே.அசீனா பீ மறைவு!

சென்னை, அக்.23-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்குப் பகுதி 106-வது வட்டக் கழக பகுதிப் பிரதிநிதி கே.முகமது அலியின் தாயார் கே.அசீனா பீ (வயது 80) அவர்கள் நேற்று மாலை 3.30 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

### கழகத்தினர் அஞ்சலி!

தகவல் அறிந்ததும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக்கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், இளைஞர் அணி, மாணவர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மறைந்த அசினா பீ உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்ச்சி இன்று (23.10.2023 திங்கட்கிழமை) காலை 11.00 மணியளவில் அவரது சொந்த ஊரான ஆம்பூரில் உள்ள முஸ்லிம் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.



இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி துறைமுகம் கிழக்கு பகுதி 55 வது வட்டத்தில் பாக முகவர்கள் மற்றும் BLC 3 ஆலோசனை கூட்டம் வட்ட செயலாளர் எல்.சத்திய நாராயணன் தலைமையில் துறைமுக தொகுதி பொறுப்பாளர் இளைஞர் அணி மாநில துணை செயலாளர் பிரபு தேர்தல் களப்பணி பற்றி ஆலோசனை வழங்கினார். உடன் கிழக்கு பகுதி செயலாளர் எஸ். ராஜசேகர், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் பி. விஜயகுமார், பகுதி துணை செயலாளர் எஸ். சந்தியாகு மற்றும் பகுதி வட்ட கழக நிர்வாகிகள் பாக முகவர்கள் (BLA2) மற்றும் BLC 3 ஆகியோர் கலந்து கொண்டனர்.

கழக மகளிர் உரிமை மாநாடு:

# நாட்டின் கவனத்தை ஈர்த்துள்ளது!

தி.மு.க. அணியின் மகளிர் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களின் முன்னெடுப்பில் நடைபெற்ற மகளிர் உரிமை மாநாடு தமிழ்நாடு மட்டுமின்றி இந்திய அளவில் சத்தமின்றி ஒரு சாதனையை நிகழ்த்தியிருக்கிறது.

நீண்டகாலமாக அரசியலில் பெண்கள் ஒரு பங்கு மட்டுமே என்ற பிம்பத்தை உடைத்து, பெண்கள் தவிர்க்க இயலாத முக்கிய பங்கு என்பதை உணர்த்தியிருக்கிறது. மேலும் இந்தியா கூட்டணிக் கட்சியின் பெண் தலைவர்கள் இணைந்து ஒரு மாபெரும் மாநாட்டை நடத்தி அதனை ஒட்டுமொத்த இந்தியாவின் பேசுபொருளாக்கி உள்ளனர். பா.ஜ.க. ஆட்சியில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை, அவர்களின் உரிமைக்கான குரல், அரசியலில் பெண்களை அதிகாரப்படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயமான முழக்கங்களை ஓங்கி ஒலித்துள்ளது இந்த மாநாடு.

பெண்கள் முழு விடுதலைப் பெற்று ஆண்களைப் போல சரிநிகராக வாழ்வதற்கு தன் வாழ்வை சிந்தனை களமாக்கிய பெரியார், இன்று இருந்திருந்தால் தி.மு.க மகளிரணி சார்பில் கடந்த வாரம் சென்னையில் நடந்த ‘மகளிர் உரிமை மாநாட்டை’ கண்டு அகம் மகழ்ந்திருப்பார்.

அவர் விட்டுச் சென்ற போராட்டங்களை இன்று நமது கழகத் தலைவர் தளபதி அவர்களும் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்களும் நமது கழக மகளிரணியும் இன்னும் உயிர்ப்போடும் மன உறுதியோடும் கொண்டுச் செல்வதை கண்டு பூரித்திருப்பார்.

ஆம், அப்படி நாம் பெருமிதம் கொள்ளும் அளவுக்குத்தான் மகளிர் உரிமை மாநாடு நடந்திருக்கிறது. ஜனநாயகத்தின் மீது நம்பிக்கைக் கொண்டோர் யாவரும், பாசிசத்தை வேரறுக்க ஓரணியாக ஒன்று திரண்டிருக்கும் இந்தச் சூழலில், இந்திய துணைக்கண்டமே உற்றுநோக்கும் வகையில், மாபெரும் ஆளுமைகளை அழைத்து மகளிர் உரிமைகளுக்காக ஒருமித்த குரலாக ஒலிக்கச் செய்திருக்கிறது, நம் மகளிர் உரிமை மாநாடு!



**ரத்னா லோகேஸ்வரன்,**
மாநில மகளிரணி சமூக வலைதள பொறுப்பாளர்
சென்னை பெருநகர மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை கொண்டாடிவரும் இவ்வேளையில், மகளிர் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்ட அவரது நினைவாக இந்த மகளிர் உரிமை மாநாடு நடத்தியிருப்பது மிகப் பொருத்தமாகும்.

பெரியார் கண்ட கனவை நெஞ்சில் சுமந்து, பெண்களுக்கு ஏற்றமிகு எதிர்காலம் அமைத்திட பல முன்னோடித் திட்டங்களால் இருளடைத்து ஒளிப் பாய்ச்சியவர் கலைஞர் அவர்கள். பெண்களுக்கு சொத்துரிமை, அரசு பணிகளிலும், உள்ளாட்சித் தேர்தல்களிலும் இடஒதுக்கீடு, கல்வியை ஊக்குவிக்கும் வகையில் திருமண உதவித் திட்டம் போன்ற கணக்கற்ற திட்டங்களை நாம் உதாரணம் சொல்லலாம், இத்திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி பிற மாநிலங்களிலும் பின்னாளில் ஒன்றிய அரசும் தனது கொள்கைகளாக வரிந்துக் கட்டி இந்தியா முழுமைக்கும் விரிவுபடுத்தியது வரலாறு.

இதே சென்னை மாநகரில், 1938ல் நமது சுயமரியாதை இயக்கத்தின் முன்னோடியான நீலாம்பிகை அம்மையார் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் தான் தந்தை பெரியாருக்கு ‘பெரியார்’ என திராவிட இயக்க முன்னோடிகளால் பெயர் சூட்டப்பட்டது. அன்றைய மாநாட்டில்தான் பெண் விடுதலை, சாதி மறுப்பு திருமணம் செய்தல், பெண்கள் மறுமணம் செய்தல், சமயசார்பற்ற முறையில் திருமணம் செய்தல், இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு, தமிழ் மொழிப்பாதுகாப்பு, ஆளுநரின் தலையிடலுக்குக் கண்டனம் உள்ளிட்ட சுயமரியாதைத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வரலாறு அறிந்தவர்கள், 85 ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்த மாநாட்டை, கடந்த வாரத்தில் நினைத்துப் பார்த்திருப்பார்கள். ஏன் என்றால், மொழித் திணிப்பு, மாநில உரிமை, இந்தியாவின் பன்முகத் தன்மையை சிதைக்கும் ஒற்றைத் தன்மை ஆட்சி, நிச்சயமற்ற நிலையில் சிறுபான்மையினர் எதிர்காலம் என பல்வேறு நிகழ்வுகளும் அதே நிலையை உணர்த்துகின்றன. அன்று தந்தை பெரியார் முன்னிற்க நடைபெற்ற மாநாடு மற்றும் அதன் விளைவுகள் சமூகத்தில் பல்வேறு வகையிலும் தாக்கம் செலுத்தின. அதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த தி.மு.க., மாநாட்டின் பல்வேறு தீர்மானங்களை அரசின் சட்டங்களாக்கியது, மகளிர் மட்டுமின்றி மாநிலமே வளரும் வகையில் வளர்ச்சித் திட்டங்களாக்கியது.

இன்று, நம் முதலமைச்சர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டின் தலைமையேற்று, பெரியாரின் கலைஞரின் வழியில் விலையில்லா நகரப் பேருந்து திட்டம், உயர் கல்விக்கு வழிகோலும் புதுமைப் பெண் திட்டம், இல்லத்தரசிகளின் உழைப்பை அங்கீகரித்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என பெண்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை சாதனைத் தடத்தில் தொடர்கிறார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் இணைந்து, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களை சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் ஒருங்கிணைத்து, மேடை வடிவமைப்பு, கழகத்தின் வரலாற்றின் முக்கியத் தருணங்களை பக்க வாட்டில் காட்சிகளாகவும், அனைவருக்குமான குடிநீர், ஓய்வறை மற்றும் பிற தேவைகளை சிறப்பான முறையில் ஏற்படுத்தி இருந்தனர்.

பாசிச பா.ஜ.க.வை வீழ்த்த இந்தியா கூட்டணிக் கட்சிகள் பெங்களூரு, மும்பை என நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆலோசனைக் கூட்டம் நடத்தியிருக்கின்றனர். கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் இந்த சூழ்நிலையை சிறப்பாக பயன்படுத்தி, காங்கிரஸின் முன்னாள் தலைவர், காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் முதல் கடைக்கோடி தமிழ்நாட்டின் பெண்களின் பிரதிநிதிகள் வரை பெண் ஆளுமைகளை ஒருங்கிணைத்து, மாநாட்டினை நடத்தினார். இத்தகைய மாநாடுகள் இந்தியா அணியிலுள்ள கட்சிகளுக்கு கருத்தொற்றுமை ஏற்படுத்தவும், கட்சிகள் இணைந்து செயலாற்றவும் வழிவகை செய்யும், இதனால் பா.ஜ.க.விற்கு எதிரான அணியில் பெண்களின் பங்கை அங்கீகரித்தும் அவர்களை பா.ஜ.க.விற்கு எதிரான முன்கள போர் வீராங்கனைகளாக மாற்றும் வரலாற்று முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளார்.

பெரியாரின் “பெண் ஏன் அடிமையானாள்?” புத்தகம் குறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ப்ரியங்கா காந்தி பேசியது முதல் கலைஞர் அவர்களின் பெண் விடுதலைக்கான திட்டங்களை காஷ்மீர், மேற்கு வங்கம் என இந்தியாவின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த அரசியல் ஆளுமைகள் புகழாரம் அளித்தது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை அண்ணன் என்றும் தலைவர் என்றும் பிற மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசியதும், கனிமொழி கருணாநிதி அவர்களுடனான தங்கள் நாடாளுமன்ற நினைவுகளை மாற்றுக்கட்சியின் முக்கிய ஆளுமைகள் நினைவுகூர்ந்ததும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து உடன்பிறப்புகளும் கொண்டாட வேண்டிய தருணமாகும்.

இன்றைய பா.ஜ.க.விற்கு எதிரான அமைப்புகளின் பெண் தலைவர்களை கொண்டு ஒருங்கிணைக்கப்பட்ட இந்த மாநாடு இன்றைய தேசத்தின் முக்கிய பிரச்னைகளை எதிர்கொள்ளவும், எதிர்கால இந்தியாவின் தேவைகளை உணர்த்தவும் உதவியுள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில், தி.மு.க. போன்ற சமூக நீதிக்கட்சிகளைத் தாண்டி, காங்கிரஸ் போன்ற தேசிய கட்சிகளின் முக்கிய ஆளுமைகளான சோனியா காந்தி, ப்ரியங்கா காந்தி போன்றோர் சாதிவாரி கணக்கெடுப்பு, பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு போன்றவற்றை பேசியுள்ளதும், இவற்றை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று உறுதியளிப்பதும் அரசியல் வானில் நிகழும் அரிய நிகழ்வுகளாகும்.

மாநாடு தொடங்குவதற்கு முன்பே இதன் வெற்றி உறுதி செய்யப்பட்டது. நிகழ்ச்சி தொடங்க சில மணி நேரங்கள் இருக்கும்போதே ஆளும் பா.ஜ.க.வினர் மாநாட்டின் நோக்கம் குறித்து ஒரு வார்த்தை கூட பேசாமல், தி.மு.க. மீதான தங்களின் வன்மங்களை கொட்டித் தீர்த்தனர், தொடர்ந்து சில நாட்களுக்கும் தங்களின் அனைத்து பேட்டியிலும் மாநாட்டின் வெற்றியை ஜீரணிக்க முடியாமல், அவதூறுகளை வாரி இறைத்தனர், ஆனால் மக்களுக்கு தெரியும் யார் தங்களுக்கான உரிமைகளை உறுதி செய்தது என்று, யார் தங்களுக்கான திட்டங்களை தொடர்ந்து ஏற்படுத்தி வருகின்றனர் என்று. இனியும் பெண்கள் ஏமாற மாட்டார்கள். பா.ஜ.க.வின் போலி மகளிர் இடஒதுக்கீடு மசோதா போன்ற தேர்தல் நாடகங்கள் இனியும் எடுபடாது.

நாங்கள் தமிழ்நாட்டின் பெண்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் கரம் பற்றி திராவிட இயக்கத்தின் வழி வந்தவர்கள். நாங்கள் சுயமரியாதை உணர்வடைந்து, தலைநிமிர்ந்து பல காலம் ஆகிவிட்டது. இனி ஒருபோதும் எங்களின் தலை குனியப்போவதில்லை.



கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி தமிழ்நாட்டில் நீட் தேர்வை ரத்து செய்ய ஒன்றிய அரசை வலியுறுத்தி மாபெரும் கையெழுத்து இயக்கம் மதுரை வடக்கு மாவட்டம் இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி சார்பாக நடைபெற்றதில் முன்னாள் எம்.பி.யும் கழக கொள்கை பரப்புச் செயலாளருமான கம்பம் செல்வேந்திரன், மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார். உடன் அவைத் தலைவர் எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியம், பொருளாளர் சோமசுந்தரபாண்டியன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் நேரு பாண்டியன், மாணவரணி அமைப்பாளர் ஆதிசங்கர் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## வங்கக் கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலம்! புயலாக வலுப்பெறும்!

சென்னை, அக்.23–

மத்திய மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுப்பெறக் கூடும் எனவும் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப் பெறும் எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு அரபி கடலில் நிலை கொண்டுள்ள 'தேஜ்' புயல் அதிதீவிர புயலாக வலுப்பெற்றுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. தேஜ் புயல் நேற்றிரவு 11.30 மணியளவில் அதி தீவிர புயலாக வலுப்பெற்று, தென்மேற்கு அரபி கடலில், சகோத்ரா (ஏமன்) நகருக்கு 330 கி.மீ. கிழக்குதென்கிழக்கேயும், சலாலா (ஓமன்) நகருக்கு 690 கி.மீ. தெற்குதென்கிழக்கேயும் மற்றும் அல் கைடா (ஏமன்) நகருக்கு 720 கி.மீ. தென்கிழக்கேயும் மையம் கொண்டுள்ளது. இந்நிலையில் மத்திய மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், புயலாக வலுப்பெறக் கூடும் எனவும் மத்திய மேற்கு வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணி நேரத்தில் புயலாக வலுப் பெறும் எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது. மேலும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப் பெற்றது எனவும் நாளை வடக்கு, வடகிழக்கு திசையில் நகர்ந்து 25ம் தேதி வங்க தேசம் அருகே கரையை கடக்கக் கூடும் எனவும் இந்திய வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது.

## வலைதளங்களில் வலம் வருவது!




### பெரியகுளம் அம்மாபட்டியில் குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளை

# குறவர் இன சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டும்!

### அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் கோரிக்கை மனு! தீர்வு காண்பதாக உறுதி!

திண்டுக்கல், அக்.23-

பெரியகுளம் அம்மாபட்டியில் கட்டப்பட்டுள்ள குடிசைமாற்று வாரிய குடியிருப்புகளை குறவர் இன சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டும் என்று தேனி மாவட்ட வனவேங்கைகள் கட்சி மாநிலத்தலைவர் இரணியன் தலைமையில் அச்சமுதாயத்தை சேர்ந்த மக்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியை சந்தித்து கோரிக்கை மனுக்களை கொடுத்தனர். தேனிமாவட்ட ஆட்சியர், பெரியகுளம் எம்.எல்.ஏ ஆகி யோருடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு வழங்குவதாக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதியளித்தார்.

தேனி மாவட்டம் அம்மாபட்டி வடவீரநாயக்கன் பட்டியில் குடிசை மாற்று வாரியம் மூலம் குறவர் சமுதாய மக்கள் குடியிருப்புக்காக கட்டப்பட்ட 110 வீடுகளை தங்கள் மாவட்டத்தை சேர்ந்த குறவர் சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டுமென்றும் என்று குறவர் சமுதாய மக்கள் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமியிடம் கடந்த இருதினங்களுக்கு முன்பு கோரிக்கை மனுக்களை கொடுத்தனர். அதுபோல மீதமுள்ள 80 குடும்பங்களுக்கும் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டுமென்று வேண்டுகோள்விடுத்தனர். வனவேங்கைகள் கட்சி மாநில தலைவர் இரணியன் தலைமையில் தேனிமாவட்டத்தை சேர்ந்த குறிஞ்சி தொல்தமிழர் குறவர் பழங்குடியினத்தை சேர்ந்த பொதுமக்கள் பெரியகுளம் அம்மா பட்டி, வடவீரநாயக்கன்பட்டியில் கட்டப்பட்டுள்ள 110 குடியிருப்புகளை முறைப்படி ஆய்வு செய்த குறிஞ்சி தொல் தமிழர் குறவர் சமுதாய மக்களுக்கு வழங்க வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். மனுவை பெற்றுக்கொண்ட ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரிய சாமி தேனி மாவட்ட ஆட்சியர் மற்றும் பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் சரவணன் மற்றும் கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை செய்து முறைப்படி தகுதியான நபர்களுக்கு குடியிருப்புகளை வழங்க நடவடிக்கை எடுப்பேன் என்றார். நிகழ்ச்சியின் போது தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்திய மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், திண்டுக்கல் மாநகர துணை மேயர் ராஜப்பா, திமுக நிர்வாகி அம்பை ரவி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாநகர பகுதி செயலாளர் அ.ராஜேந்திர குமார், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பாறைப்பட்டி வாஞ்சிநாதன், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஜான்பீட்டர், ஆனந்த் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் டாஸ்மாக் வடிவேலு, நந்தி நடராஜன், உட்பட பலர் உடனிருந்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றிய திமுக சார்பாக பொழிச்சலூர் ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக அரசின் சாதனைகளை விளக்கி ஒன்றிய துணைச் செயலாளர் கே.செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் கரூர் முரளி மாவட்ட கழக துணைச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி ஆகியோர் கலந்துகொண்டு அரசின் சாதனைகளை விலக்கி சிறப்புரை ஆற்றினார்கள் அப்பொழுது ஒன்றிய செயலாளர் ரவி என்கிற விவேகானந்தன் தொ.மு.ச பேரவை செயலாளர் இரா. பொன்ராம் ஒன்றிய பொருளாளர் ராஜா ஊராட்சி துணைத் தலைவர் ஜோசப் ஒன்றிய ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கம்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் - மாவட்ட செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், பங்கேற்பு

நாமக்கல், அக். 23-

தி.மு.க. இளைஞர் அணி, மருத்துவர் அணி மற்றும் மாணவர் அணி சார்பாக நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை விளையாட்டு மற்றும் இளைஞர் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் துவங்கி வைததார்.

நாமக்கல் மேற்கு திருச்செங்கோட்டில் நீட் விலக்கு நம் இலக்கு என்ற கோஷத்தை முன்னிறுத்தி நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் மதுரா செந்தில் தலைமையில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் துவக்கி வைத்தனர்.

நீட் விலக்கு நம் இலக்கு என்ற கோஷத்தை முன்னிறுத்தி நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தை திமுக முன்னெடுத்து வருகிறது. அதன்படி தமிழகத்தில் 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து பெறும் விதமாக கையெழுத்து இயக்கத்தை சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார், அதனைத் தொடர்ந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்த இயக்கம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருச்செங்கோட்டில் உள்ள திருமண மண்டபத்தில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இந்த கையெழுத்து இயக்கத்தை திமுக இளைஞரணி, மருத்துவர் அணி, மாணவர் அணியினர் நடத்தினர். 500க்கும் மேற்பட்டோர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கையெழுத்திட்டு அட்டைகளை உயர்த்திப் பிடித்து தங்களது ஆதரவை தெரிவித்தனர், ஒவ்வொரு பகுதியிலும் பொதுமக்களிடம் நீட் தேர்வின் விபரீதங்கள் குறித்து எடுத்துக் கூறி கையெழுத்து பெற்று அனுப்ப வேண்டும் என்று நிர்வாகிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

திருச்செங்கோட்டில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மாவட்ட செயலாளர் மதுரா செந்தில் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டு நீட் தேர்வுக்கு எதிராக தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர், இந்த கையெழுத்து பெற்ற அட்டைகள் வரும் டிசம்பர் மாதம் நடைபெற உள்ள இளைஞர் அணியின் இரண்டாவது மாநாட்டில் முதல்வரிடம் ஒப்படைக்கப்படும். அவர் குடியரசு தலைவருக்கு அந்த கையெழுத்துக்களை அனுப்பி வைத்து தமிழகத்தின் கண்டனத்தை பதிவு செய்வார் என்று அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர் தா.கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர் வட்டூர் ஜி தங்கவேல், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அமைப் பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி மருத்துவர் அணி மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் 500க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல்!

### நடவடிக்கை எடுக்கக் கோரி ஒன்றிய அரசிடம் வலியுறுத்திய

# தமிழ்நாடு முதலமைச்சருக்கு மீனவரணி சார்பில் நன்றி!

### மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

சென்னை, அக். 23-

14.10.2023 அன்று இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டதமிழ் நாட்டைச் சேர்ந்த 27 மீனவர்கள் மற்றும் அவர்களது ஐந்துமீன்பிடிப்படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்தியுள்ளதமிழ்நாடு முதலமைச்சர். கழகத்தலைவர், தளபதியார் அவர்களுக்கு கழக மீனவரணி சார்பில்நன்றிதெரிவித்துமீனவர் அணி செயலாளர் அ.ஜோசப்ஸ்டாலின்விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், இருவேறு சம்பவங்களில் 27 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடுஅவர்களதுமீன்பிடிப் படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுகுறித்துமுதலமைச்சர். கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர்அவர்களுக்குஎழுதியுள்ள கடிதத்தில் கடந்த 14.10.2023 அன்று INDTNMM237, INDTN10MM970, INDTN10MM56 மற்றும் INDTN10MM708ஆகியபதிவுஎண்கள் கொண்ட4மீன்பிடிப்படகுகளில் சென்ற ராமேஸ்வரத்தைச்சேர்ந்த23மீனவர்களும் மற்றொரு சம்பவத்தில் INDTN11MM725 பதிவுஎண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச்சென்ற நான்கு மீனவர்களும், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களதுமீன்பிடிப்படகுகள் பறிமுதல் செய்துள்ளனர் அவர்களை விடுவிக்க இந்திய ஒன்றிய அரசு நடவடிக்கைமேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

மீன்பிடித்தொழிலைமட்டுமேநம்பியுள்ளமீனவர்கள் கைது செய்யப்படுவதும், தாக்கப்படுவதும் மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில்பாதிப்பைஏற்படுத்தியுள்ளது வேதனையளிக்கிறது. இதுபோன்றசம்பவங்களால்மீனவசமுதாயக்குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இலங்கை இடையேபயணிகள்கப்பல் போக்குவரத்தைஇந்தியபிரதமர் அவர்கள் துவங்கி வைத்த நாளிலும் நாகை, கோடியக்கரை மீனவர்கள் மீது இலங்கை கடற் கொள்ளையர்கள் கொலைவெறி தாக்குதல் நடத்தியதோடு அவர்களின் தகவல் தொடர்புசாதனங்கள், மீன்பிடிவலைகள், மீன்கள் என அத்தனைஉடமைகளையும் கத்திமுனையில் பறித்து சென்றுள்ளது மிகுந்த கவலையளிக்கிறது.

கடந்த நான்கு மாதங்களாகஇலங்கைகடற்கொள்ளையர்களின் அட்டூழியம் மிக அதிகரித்துள்ளதை தடுத்து நிறுத்த வேண்டும் இந்திய மீனவர்களின் மீதான கொலைவெறி தாக்குதல்கள் தொடராத வண்ணம் இந்திய ஒன்றிய அரசு விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்திவரும்தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத்தலைவர் தளபதியார் அவர்களுக்கு கழக மீனவர் அணி சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக மீனவர் அணி செயலாளர் அ. ஜோசப் ஸ்டாலின் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.சி. சந்திரன்
### அக்டோபர் 23 (2006)



தனது இளமைக் காலத்திலிருந்தே கழகப் பணியில் ஈடுபட்டு, அம்பத்தூர், முகப்பேர் பகுதிகளில் கழகம் வளர பாடுபட்டவர்.

ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டக் கழகப் பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

அம்பத்தூர் நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

"முகப்பேர் பகுதியில் கழகத்தை வளர்ப்பதில் வளர்பிறை சந்திரன்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.ஆர். கோவிந்தன்
### அக்டோபர் 23 (2021)



தனது இளமைக் காலத்திலிருந்தே தீவிரமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

சென்னை, அண்ணா நகர் பகுதியில் மாவட்ட பிரதிநிதி, வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கங்காதீஸ்வரர் கோவில் அறங்காவலர், புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தி நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு எட்டு முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 23-10-2023

# அரசும் ஆலயங்களும் 1

கோவில்களை அரசே எடுத்து நடத்த வேண்டும் என்ற வழக்கு மனுவை உச்சநீதிமன்றம் இரண்டு நாட்களுக்கு முன்னால் தள்ளுபடி செய்து விட்டது. நீதிமன்றங்களின் மூலமாக இதனை அரசியல் சர்ச்சையாக ஆக்க நினைத்தவர்கள் அனைவருக்கும் மிகப்பெரிய அடியைக் கொடுத்திருக்கிறது உச்சநீதிமன்றம்.

வழக்கறிஞர் அஷ்வினி உபாத்யாய் என்பவர் உச்சநீதி மன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்கிறார். அதன் உள்ளடக்கம் என்பது இதுதான்:

**“அரசியல் சாசனத்தின் 26 ஆவது பிரிவின்படி அனைத்து மதத்தினரும் மத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் தொண்டு நோக்கங்களுக்காக நிறுவனங்களை உருவாக்கவும், பராமரிக்கவும் உரிமை உள்ளது. ஆனால் இந்துகள், ஜைனர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்களுக்கு இந்த உரிமை மறுக்கப் படுகிறது. நாடு முழுவதும் உள்ள 9 லட்சம் கோவில்களில் 4 லட்சம் கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஆனால் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகளுக்கு தங்கள் மத வழிபாட்டுத் தலங்களை நிர்வகிக்க உரிமை வழங்கப்படுகிறது. இது போலவே இந்து உள்ளிட்ட மற்ற மதத்தினருக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும்” என்று அவர் தனது மனுவில் கோரிக்கை வைத்திருந்தார்.**

இந்த மனுவை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான அமர்வு விசாரித்து, இந்த வழக்கையே தள்ளுபடி செய்தது. ‘விளம்பரத்துக்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளீர்கள்’ என்றும் நீதிபதிகள் கண்டித்துள்ளார்கள். “இது பற்றி நாடாளுமன்றமும், சட்டமன்றமும் தான் முடிவு செய்ய முடியும். நீதி மன்றங்களால் இவற்றுக்குத் தீர்வு கொடுக்க முடியாது” என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு சொல்லி விட்டது.

**கோவில்களை வைத்து அரசியல் செய்ய நினைக்கும் குதர்க்கப் பேர்வழிகளுக்கு நெத்தியடியாக இது அமைந்துள்ளது.**

சில வாரங்களுக்கு முன்னால் பிரதமர் நரேந்திர மோடியே இப்படி ஒரு கருத்தை தெலுங்கானா மாநிலத்தில் பேசினார். அரசாங்கத்தை நடத்தும் நிர்வாகப் பொறுப்பில் இருந்து கொண்டு அரசாங்க நிர்வாக கட்டமைப்புக்கு எதிராகவே கருத்துச் சொல்வதற்கு அவரால் மட்டும் தான் முடியும்.

**‘தமிழ்நாட்டில் உள்ள இந்து கோவில்களை, தி.மு.க. அரசு கைப்பற்றி ஆக்கிரமித்துள்ளது. கோவில் சொத்துகள் மற்றும் வருமானங்கள் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது” என்று பகிரங்கமாக மாண்புமிகு பிரதமர் மோடி அவர்கள் பேசியதாக ‘தினமலர்’ நாளிதழ் செய்தி வெளியிட்டு இருந்தது. அருட்திரு வள்ளலாரின் 200 ஆவது பிறந்த நாள் விழாவில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதனைக் கடுமையாகக் கண்டித்தார். “பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். பிரதமர் அவர்களுக்கு நான் எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பொறுப்பு வாய்ந்த இந்திய நாட்டின் பிரதமர் அவர்கள் - தவறான அவதூறுச் செய்தியை சொல்வது சரியா? ஒரு மாநில அரசின் செயல்பாடு குறித்து - இன்னொரு மாநிலத்தில் போய் - பேசுவது முறையா?தர்மமா?” என்று முதலமைச்சர் கடும் கண்டனத்தை பதிவு செய்தார்.**

பிரதமரின் உரையை ‘தினமலர்’ நாளிதழ் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு இருந்தது. “அந்த நாளிதழின் நிர்வாகி ஒருவர், புகழ்பெற்ற திருக்கோவில் ஒன்றில் அறங்காவலர்களில் ஒருவராக இருக்கிறார். அப்படியானால் அவர், அந்த கோவிலை ஆக்கிரமித்துள்ளார் என்று அர்த்தமா?” என்றும் முதலமைச்சர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.17.6.2022 ஆம் நாள் தேதியிட்ட ‘தினமலர்’ பத்திரிகையில் அதன் வெளியீட்டாளர் - இல.ஆதிமூலம் அவர்கள், “கோவில் உண்டியல் பணம் எங்கும் போகாது” என்பது ஆகும்.

பொதுவாகவே கோவில் பணங்கள் முறையாக பயன்படுத்தப்படுவது இல்லை என்பது போன்ற பொய்ப் பிரச்சாரத்தை தொடர்ந்து கட்டமைத்து வருகிறார்கள். இந்த பொய்ப்பிரச்சாரத்துக்கு ‘தினமலர்’ நாளிதழே பல நேரங்களில் துணை போய்க் கொண்டிருப்பது தான். ஆனால் அதன் வெளியீட்டாளர் ஆதிமூலம் அது தவறு என்பதை விரிவாக எழுதி இருக்கிறார்.

ஆலயங்களின் பணத்தை அரசு எவ்வளவு முறையாகக் கையாள்கிறது என்பதை ஆதிமூலம் விவரிக்கிறார்…

★ மூன்றாண்டுகளாக சென்னை வடபழநி கோவிலின் தக்கார் பொறுப்பை வகித்து வருவதால் அங்கு நடக்கும் பல விஷயங்களை நான் நன்கறிவேன்.

★ சிலர் கூறுவதைப் போன்று உண்டியல் பணம் வேறு எங்கும் போவது இல்லை.

★ தனியார் துறை நிர்வாகங்களைக் காட்டிலும் ஹிந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் இருக்கும் கோவில் நிர்வாகங்களில் பணவரவு - செலவுக்கான சட்ட நடை முறைகளும் கட்டுப்பாடுகளும் கடுமையாகக் கடைப்பிடிக்கப் படுகின்றன.

★ இங்கு அவ்வளவு எளிதாக முறைகேடு நடந்து விட முடியாது.

★ கோவில்களுக்கான சட்ட நடைமுறைகள் மற்றும் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, பக்தர்களுக்கான பல நற்பணிகள் தாமதமாகிறது என்று சொல்லலாமே தவிர கோவில் வருமானம் வேறு எங்கோ போகுமளவிற்கு சட்டத்தில் ஓட்டை இல்லை.

★ கோவில்களில் உண்டியல் வைக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை பக்தர்களின் காணிக்கைகள் பத்திரமாகத்தான் இருக்கின்றன. மிகுந்த முன்னெச்சரிக்கையுடனேயே கையாளப்படுகின்றன.

★ காணிக்கை குறித்த பதிவேடுகள் எண்ணி முடிக்கப்பட்ட மறுநாளே அறநிலையத் துறை அலுவலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு - அங்குள்ள பதிவேடுகளில் ஏற்றப்படுகின்றன. அதிலிருந்து ஒரு நகல் தணிக்கைப் பிரிவுக்கும் அனுப்பப் படுகிறது. தனியார் நிறுவனங்களில் இல்லாத அளவுக்குக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் கடைப்பிடிக்கப்படுகின்றன.

- தொடரும்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். உடன் கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே. கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்தார். உடன் கழகப் பொதுச்செயலாளர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளார் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே. குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே. கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலை, அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள 600 அதிநவீன படுக்கை வசதி கொண்ட பல்நோக்கு மருத்துவமனையை திறந்து வைத்து, மருத்துவ மாணவ, மாணவியர்களுக்கு கையடக்க மடிக்கணினிகள் வழங்கினார். உடன் கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை மருத்துவக் கல்லூரி தலைவர் திருமதி சங்கரி, துணைத் தலைவர் எ.வ.வே.குமரன், மருத்துவக் கல்லூரி இயக்குநர் எ.வ.வே. கம்பன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### தொடர் விடுமுறை: கட்டணத்தை ஏற்றிய தனியார் ஆம்னி பஸ்கள் பறிமுதல்!

சென்னை, அக். 23-

தொடர் விடுமுறையை ஒட்டி ஆம்னி பேருந்துகளில் கட்டணங்கள் அதிக வசூலிக்கப்படுவதாக பயணிகள் புகார் தெரிவித்து வந்த நிலையில், விதிகளை மீறியதாக 102 ஆம்னி பஸ்களை போக்குவரத்து துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

தமிழகத்தில் 23, 24 ஆகிய தேதிகளில் ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி பண்டிகை காரணமாக விடு முறை விடப்பட்டுள்ளது. ஏற்கனவே சனி, ஞாயிற்றுக் கிழமை விடுமுறை என்பதால் மொத்தம் 4 நாட்கள் விடுமுறை காரணமாக சென்னையில் வசிக்கும் வெளி மாவட்ட மக்கள் சொந்த ஊர்களுக்கு புறப்பட தொடங்கினர். இதனால், வெளியூர் செல்லும் அரசு பேருந்துகள் மற்றும் ரயில் களில் பயணிகள் கூட்டம் அலைமோது கிறது.

பயணிகள் வசதிக்காக தமிழ்நாடு அரசு போக்கு வரத்து கழகமும் சிறப்பு பேருந்துகளை இயக்கி வருகிறது. எனினும், இந்த பேருந்துகளிலும் புக்கிங் முடிந்து விட்டது. இதனால், பயணிகள் பலரும் ஆம்னி பேருந்துகளை நாடி செல்கின்றனர். ஆம்னி பேருந்துகளிலும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பல மடங்கு கட்டணத்தை ஏற்றி யுள்ளதாக பயணிகள் முன் வைக்கும் குற்றச்சாட்டாக உள்ளது.

**102 பஸ்கள் பறிமுதல்:**

இது தொடர்பாக தமிழக போக்குவரத்து துறைக்கும் அதிக அளவில் புகார்கள் வந்தன. இதையடுத்து, அதிரடியாக களத்தில் இறங்கிய அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர். மீனம்பாக்கம் வட்டார போக்குவரத் துறை அதிகாரிகள் தாம்பரம், பெருங்களத்தூர், செங்கல் பட்டு உள்ளிட்ட பகுதிகளில் தென் மாவட்டங்களுக்கு செல்லும் ஆம்னி பேருந்து களை நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது பல பேருந்து களில் பயணிகளிடம் கூடுதல் வசூலிக்கப்பட்டது தெரியவந்தது. இதையடுத்து 102 ஆம்னி பேருந்துகளை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

சுமார் 1,545 ஆம்னி பஸ்கள் விதிகளை மீறியது கண்டு பிடிக்கப்பட்டு ரூ.27.67 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டு உள்ளது. தொடந்து இது போன்ற கண்காணிப்பு நடவடிக்கைகள் இருக்கும் என்று போக்குவரத்து துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.10.2023) திருவண்ணாமலையில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளருமான ந. பாண்டுரங்கன், அண்மையில் திருமணம் நடைபெற்ற தனது மகள் பா. மதிமொழி, மருமகன் வ. பரந்தாமன் (எ) சங்கர் ஆகியோருடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலை, கலைஞர் திடலில் நடைபெற்ற திருவண்ணாமலை நகர கழகச் செயலாளர் ப. கார்த்திவேல்மாறன் மற்றும் நகர மன்றத் தலைவர் திருமதி நிர்மலா வேல்மாறன் தம்பதியரின் மகள் வே. காமினி எஸ். ரகுநாத் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக நிர்வாகிகள் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார்!

# நெல்லை மாவட்டத்தில் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி - இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம்!

## நிகழ்ச்சிக்கான இடங்களை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார்!

நெல்லை, அக். 23-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகிற 27.10.2023 வெள்ளி அன்று நெல்லை மாவட்டத்தில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் ஆகிய நிகழ்வுகளில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளதை முன்னிட்டு அதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் ஆகியோர் முன்னிலையில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டார்.

கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்டம் தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், மற்றும் அரசு ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று நலத்திட்ட உதவிகள் வழங்குதல் போன்ற நிகழ்வுகளில் கலந்து வருகிறார்.

தூத்துக்குடி, தென்காசி மாவட்டத்தில் சுற்றுப் பயணத்தை முடித்த நிலையில் வருகிற 27.10.2023 வெள்ளி அன்று நெல்லை மாவட்டத்திற்கு வருகை தருகிறார்கள்.

அதன்படி ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தின் சார்பில் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல், கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம், போன்ற நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக வருகை தரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெல்லைக்கு வருவதை முன்னிட்டு நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் சிறப்பான முறையில் செய்து வருகின்றனர்.

பாளையங்கோட்டை கே.டி.சி.நகரில் உள்ள மாதா மாளிகையில் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சியும், அதனை தொடர்ந்து கே.டி.சி நகர் மேம்பாலம் பகுதியில் உள்ள திறந்தவெளி மைதானத்தில் இளைஞர் அணி செயல்வீரர்கள் கூட்டம் மேடை அரங்கு அமைக்கப்பட்டுவரும் இடங்களை நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்கும் படி கேட்டுக் கொண்டார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலை ராஜா, தலைமை செயற் குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணன், பரமசிவ ஐயப்பன், மேயர் பி.எம்.சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ், தர்மன்,

மாவட்டப் பொருளாளர் அண்ணாதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜான்ரபீந்தர், கருப்பசாமி கோட்டையப்பன், மாவட்ட அணி அமைப்பாளர் வழக்கறிஞர் அணி செல்வசூடாமணி, தொண்டர் அணி தொப்பி மைதீன், ஆதிதிராவிடர் நலக்குழு நவநீதன், பொறியாளர் அணி சுரேந்தர், நெசவாளர் அணி ஸ்டீபன், விவசாய அணி முருகன், துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மீரான் மைதீன், அலிஃப்மீரான், நெசவாளர் அணி சங்கரலிங்கம், மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் ராஜாமுகமது உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## வலைதளங்களில் வலம் வருவது!






# திராவிட மாடல் அரசு 40

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**



**திட்டத்தின் பெயர் :** தமிழ்நாடு முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம்
**கால வரம்பு :** இரண்டு ஆண்டுகள் (2022 2024)
**ஒதுக்கப்பட்ட நிதி :** சுமார் 6 கோடி ரூபாய்
**கல்வித் தகுதி :** ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு
**விண்ணப்பித்தவர்கள் :** சுமார் 25 ஆயிரம் பேர்
**முதல்நிலைத் தேர்வில் பங்கேற்றவர்கள் :** சுமார் 14 ஆயிரம் பேர்
**இரண்டாம்நிலைத் தேர்வில் பங்கேற்றவர்கள் :** 605 பேர்
நேர்முகத் தேர்வில் பங்கேற்றவர்கள் : 183 பேர்
**இறுதியாகத் தேர்வு பெற்றவர்கள் :** 30 பேர் (ஆண்கள் 15, பெண்கள் 15 பேர். முறையான இடஒதுக்கீடும் பின்பற்றப்பட்டுள்ளது)
**மாத ஊக்க ஊதியம் :** 75 ஆயிரம் ரூபாய்

## அரசுத் திட்டங்களின் துணைவர்கள்!

அரசு இயற்றும் மக்கள் நலத் திட்டங்கள் எல்லாம் இரவில் யோசித்துக் காலையில் அறிவிக்கப்படுபவை அல்ல. ஒரு திட்டம், அது எவரிடம் இருந்து தோன்றினாலும், அப்படியே நடைமுறைக்கு வருவதில்லை. அதிகாரிகள், ஆய்வாளர்கள், முற்கால அனுபவங்கள், இதர மாநிலங்கள், நாடுகளில் இருந்து பெறும் படிப்பினைகள் எனப் பல திசைகளில் இருந்து கிடைக்கும் யோசனைகள், கருத்துகளின் அடிப்படையில் அந்தத் திட்டம் ஒவ்வொரு நாளும் செழுமைப்படுத்தப்படும்.

ஓர் அரசு இயந்திரம் இப்படித்தான் இயங்கும். பல கட்ட பரிசோதனைகளுக்குப் பிறகு மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களை, களத்துக்குச் சென்று ஆய்வு செய்து, அவற்றை இன்னும் மக்களிடம் எப்படிக் கொண்டு சேர்க்கலாம், அந்தத் திட்டத்தை இன்னும் எப்படி வலுப்படுத்தலாம், திட்டத்தில் தென்படும் சிறு சிறு இடைவெளிகளை எப்படி நிரப்பலாம் என்பதை அரசுக்கு எடுத்துச் சொல்ல, கள ஆய்வாளர்கள் தேவை. அவர்கள் அரசுத் திட்டங்களின் இணைச் சக்கரங்களாக இருந்து, மக்கள் நலத் திட்டங்கள் வலுவடைய, வளமடைய, விரிவடைய உதவுவார்கள்.

அப்படியான கள ஆய்வாளர்களை உருவாக்கும் முயற்சியாக, நம் கழகத் தலைவர் முதலமைச்சரின் தலைமையிலான ’திராவிட மாடல் அரசு’ கொண்டு வந்திருப்பதுதான், ’தமிழ்நாடு முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம்’ (சீஃப் மினிஸ்டர் ஃபெல்லோஷிப் புரோகிராம்).

### இளைஞர்கள் மீதான நம்பிக்கை

2021 மே மாதம் நம் கழக அரசு பொறுப்பேற்றவுடன், 2021-2022 சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை மானியக் கோரிக்கையின் போது ஓர் அறிவிப்புச் செய்யப்பட்டது.

அதில் "மாநிலத்தில் உள்ள இளைஞர்களின் திறமைகளில் இந்த அரசு அதிக அளவில் நம்பிக்கை கொண்டுள்ளது. அரசு சேவைகளை மேம்படுத்த இளைஞர்களின் வளத்தைப் பயன்படுத்தி முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் செயல்படுத்தப்படும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, 2022 மார்ச் மாதம் இதுதொடர்பான அரசாணை வெளியிடப்பட்டது. அதில், இந்தத் திட்டத்தை அரசுடன் இணைந்து கல்விப் புல ரீதியாகச் செயல்படுத்த, பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மைக் கல்வியை வழங்குவதில் நீண்ட அனுபவம் உள்ள திருச்சியைச் சேர்ந்த பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் (பாரதிதாசன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் மேனேஜ்மென்ட்) தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிறகு, அந்தக் கல்வி நிறுவனம் மூலம் குடிமைப் பணித் தேர்வுகளுக்கு இணையாக இரண்டு கட்ட எழுத்துத் தேர்வு, ஒரு நேர்முகத் தேர்வு என மூன்று கட்ட தேர்வுகள் நடத்தப்பட்டு தகுதியான இளம் ஆய்வாளர்கள் 30 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

இவர்கள், நீர் வள ஆதாரங்கள் மேம்பாடு, விவசாயம், வீட்டு வசதி, கல்வி, சுகாதாரம், சமூக உள்ளடக்கம், உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறை மேம்பாடு, திறன் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு, கடன் திட்டங்கள், கலாச்சாரம் மற்றும் பண்பாடு, சுற்றுச்சூழல் மற்றும் தரவு நிர்வாகம் என 12 வகையான கருப்பொருள்களின் அடிப்படையில், இந்தக் கருப்பொருள்களின் கீழ் வரும் அரசுத் துறைகளில் பணியாற்றுகிறார்கள். ஒவ்வொரு மாணவரும் இரண்டு மாதங்களுக்கு ஒரு துறை என்ற முறையில் பணியாற்றுவார்கள்.

### அரசுத் திட்டங்களில் நேரடி ஈடுபாடு

மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் தேர்வு செய்யப்பட்டுள்ள இந்த இளம் ஆய்வாளர்கள், பொறியியல், சட்டம், வேளாண்மை எனப் பலவிதமான கல்விப் புலங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு ஊக்க ஊதியத்துடன் (ஸ்டைபண்ட்) இரண்டு ஆண்டுகாலப் புத்தாய்வுப் பயிற்சி வழங்கப்படுகிறது.

இவர்கள், தமிழ்நாடு அரசின் பல்வேறு முதன்மை மற்றும் முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். மேலும், முதலமைச்சர் அலுவலகம், சம்பந்தப்பட்ட துறைகளின் வழிகாட்டுதலில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்கிறார்கள்..

இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களைக் கண்காணித்து, செயல்பாட்டில் பிரச்சினைகள் இருந்தால் அவற்றைக் களைவதற்கும், திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கும், தேவையான முடிவுகளை எடுப்பதற்கும் உதவியாக இருக்கிறார்கள்.

இதன் மூலம், அந்த இளம் ஆய்வாளர்களின் வருங்காலப் பணிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதோடு, அந்த மாணவர்கள் தரும் உள்ளீடுகள் மூலம் அரசுத் திட்டங்களும் செழுமையடைகின்றன. இவ்வாறு, மாணவர்கள், அரசு என இரண்டு தரப்புக்கும் பரஸ்பர பயன் விளைவிக்கும் திட்டமாக முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், தற்போது ஓராண்டு காலத்தைக் கழித்திருக்கிறார்கள் மாணவர்கள். இந்த சேவை முதல் அரசு கட்டுமானத் திட்டங்களில் மாற்றுக் கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்துவது வரை எனப் பல திட்டங்களில், இந்த ஆய்வாளர்களின் பங்களிப்பு இருக்கிறது. அரசுத் திட்டங்கள் பொலிவு பெறுகின்றன என்பது ஒருபக்கம் இருந்தாலும், இன்னொரு பக்கம் வருங்கால அதிகாரிகளை உருவாக்கவும் முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் பயன்படுகிறது என்று சொன்னால், அது மிகையில்லை..!

**...சாதனை தொடரும்**

**35 வயதுக்கு மிகாமல் உள்ள இந்த இளம் ஆய்வாளர்களில் பலர், ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட குடிமைப் பணித் தேர்வுகளுக்குத் தயாராகி வருபவர்கள். இந்தத் திட்டத்தில் அவர்களின் அனுபவம் குறித்துக் கேட்டபோது...**

"இந்தத் திட்டத்தின் மூலம் எங்களுக்கு அரசுத் துறைகள், அரசுத் திட்டங்கள் எப்படிச் செயல்படுத்தப்படுகின்றன என்பது குறித்து நேரடி அனுபவம் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தின்படி, நாங்கள் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் இரண்டு முறையாவது களத்துக்குச் சென்று மக்களிடம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகளை அறிய வேண்டும். அப்படிப் பேசும்போதுதான், ஒரு திட்டத்தில் எங்கெல்லாம் இடைவெளி உள்ளது என்பது எங்களுக்குத் தெரிய வருகிறது. அந்த இடைவெளியை நிரப்ப, நாங்கள் அளிக்கும் யோசனைகளையும் அரசு ஏற்றுக் கொள்கிறது.

மேலும், இதர மாநிலங்கள் மற்றும் நாடுகளில் மக்கள் நலத் திட்டங்கள் சார்ந்து பின்பற்றப்படும் சில சிறந்த முறைகளைப் பற்றி, பல ஆராய்ச்சி இதழ்களில் வெளியான கட்டுரைகள் மூலம் நாங்கள் கற்றுக்கொள்கிறோம். அவை குறித்து, அதிகாரிகளுடன் விவாதித்துப் பயனடைகிறோம். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நாங்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளுக்குப் ’பாரதிதாசன் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் மேனேஜ்மென்ட்’ நிறுவனம் எங்களுக்கு மதிப்பெண் வழங்குகிறது. இரண்டு ஆண்டுகளின் முடிவில் எங்களுக்குப் ’பப்ளிக் பாலிசி அண்ட் மேனேஜ்மென்ட்’ பிரிவில் முதுநிலைப் பட்டயமும் வழங்கும்.

அதனால் நாங்கள் வருங்காலத்தில் ஐ.ஏ.எஸ். தேர்வுகளிலும், இதர நிறுவனங்களிலும் மிக நன்றாகச் செயலாற்ற முடியும் என்று நம்புகிறோம். ஒரே சமயத்தில் கல்வியையும், பணி அனுபவத்தையும் வழங்கும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் அரசுக்கு எங்கள் நன்றி" என்றார்கள்.

## கிரிக்கெட் அரசியல்!

இந்தியாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, உலக அளவில் கேலிக்குரிய நிகழ்வாகப் போய்க் கொண்டிருக்கிறது. போட்டி தொடங்கிய நாள் முதல் இன்று வரை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக விமர்சனங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

சில நாட்களுக்கு முன்பு பாகிஸ்தான் ஆஸ்திரேலியாவுக்கு இடையே பெங்களூருவில் நடைபெற்ற போட்டியில், பாகிஸ்தான் ரசிகர்கள் சிலர் பாகிஸ்தான் அணிக்கு ஆதரவாக கோஷம் போட, அவர்களை காவல்துறை அப்படிச் சொல்லக் கூடாது என்று எச்சரித்திருக்கிறது.

போலவே, வங்கதேச அணியின் தீவிர ரசிகர் சோயிப் அலி. அவர் புலியைப் போல உடலில் வண்ணமிட்டு தனது ஆதரவை வங்கதேச அணிக்குத் தெரிவிப்பதை வழக்கமாக வைத்திருப்பவர். அதனால் அவருக்கு ‘டைகர் சோயிப்’ என்ற பட்டப் பெயரும் உண்டு. இந்தியாவுக்கும் வங்க தேசத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டியின் போது இவரிடமிருந்த புலி பொம்மையை வாங்கி அதைக் கிழித்தெறிந்திருக்கிறார்கள் இந்திய ரசிகர்கள்.

அதிகாரிகளின் ஒடுக்கு முறை ஒரு பக்கம், ரசிகர்களின் பைத்தியக்காரத்தனங்கள் ஒரு பக்கம் என இந்தியாவின் மானம் உலக அளவில் சீரழிந்து கொண்டிருக்கிறது. கிரிக்கெட்டு சிரிக்கெட்டு ஆகிறது!

## :ப்ளாஷ்பேக்



### குடும்பத்துடன் கார்கில் நிதி!

1999-இல் இந்தியா பாகிஸ்தான் இடையே கார்கில் போர் தீவிரம் அடைந்த நேரத்தில், இந்திய வீரர்களின் நலனுக்காக நிதி திரட்ட ‘முரசொலி’யில் தலைவர் கலைஞர் கடிதம் எழுத, நிதி குவிய தொடங்கியது. 13.07.1999 அன்று எனது மனைவி ஆர்.கீதா, மகள் ஆர்.பிரியங்கா, மகன் ஆர்.சூரியா ஆகியோருடன் தலைமைச் செயலகத்தில் கலைஞரை சந்தித்து ரூ.3,000 நிதி அளித்தோம். அப்போது கலைஞர், என் மகன் கன்னத்தைத் தட்டி ‘உன் பெயர் என்ன?’ என்று கேட்டு நிதியைப் பெற்று, ஐயா சண்முகநாதனிடம் கொடுத்து எங்களை வாழ்த்தினார்.



ராமதாஸ்

**-ஆ.ராமதாஸ், ஆலந்தூர் தெற்குப் பகுதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங் களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033- 24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### தமிழரசுக்கு ஆதரவு!

**1956-ஆம் ஆண்டு செப்டம்பர் 24-ஆம் தேதி முதல் ம.பொ.சிவஞானத்தின் தமிழரசு கழகத்தினர் வடஎல்லைப் போராட்டத்தினை நடத்தத் தொடங்கினர். மொழிவாரி மாநிலங்கள் அதிகாரப்பூர்வமாக அமையும் நாளில், சித்தூர், திருத்தணி, திருப்பதி போன்ற பகுதிகள் தமிழ் பேசும் பகுதிகளுடன் இணைக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கையுடன் இந்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. ஏற்கெனவே தனிப் போராட்டங்களை நடத்தி வந்த கழகம், ம.பொ.சி நடத்திய போராட்டத்துக்கு ஆதரவு அளித்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 278




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131



இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 74 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 06 – திங்கள்கிழமை 23 அக்டோபர் 2023 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 74: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 06 - Monday 23 October 2023 - Chennai 10 Pages ₹ 5.00


## வரும் நாடாளுமன்றத் தேர்தல் களம்;

# இந்தியாவைக் காத்திட வெற்றிக்கனி பறிப்போம்!

## திருவண்ணாமலையில் வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**திருவண்ணாமலை, அக். 23 -**

**திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல வாக்குச் சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் உரையாற்றிய கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "வரும் நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் இந்தியாவைக் காத்திட வெற்றிக்கனி பறிப்போம்' என்று உறுதிபடக் கூறினார்.**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (22-10-2023) திருவண்ணாமலையில் நடைபெற்ற வடக்கு மண்டல வாக்குச்சாவடி முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-

நாடாளுமன்றக் களம் நமக்காக காத்திருக்கிறது. வெற்றிக் கனியைப் பறிக்க, அந்தத் தேர்தல் பணிக்கான தொடக்கப்புள்ளியான வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தை நாம் தொடர்ந்து நடத்தி வருகிறோம். மத்திய மண்டல மாவட்டங்களுக்கான பொறுப்பாளர்கள் கூட்டம் திருச்சியிலும் தென் மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் இராமநாதபுரத்திலும் மேற்கு மண்டல மாவட்டங்களுக்கான கூட்டம் திருப்பூரிலும் நடந்தது. இப்போது உங்களுடைய முகங்களை பார்ப்பதற்காகவே இந்த வடக்கு மண்டல மாநாட்டிற்கு கழகத்தின் கோட்டையாக விளங்கும் திருவண்ணாமலைக்கு நான் வந்திருக்கிறேன்.

### "சீக்ரெட் ஆப் மை எனர்ஜி"!

ஒளி மிகுந்த ஊரில் உங்கள் முகங்களில் எல்லாம் உதயசூரியனின் ஒளியை பார்க்கிறேன். தினமும் காலையில் சூரிய ஒளியை பார்க்கும்போது என்ன மாதிரியான உற்சாகம் ஏற்படுமோ, அதே மாதிரியான உற்சாகம்தான் உங்களை பார்க்கும் போதும் ஏற்படுகிறது! உற்சாகம் என்று சொல்வதைவிடப் புதியதொரு உணர்ச்சியும் எழுச்சியும் ஏற்படுகிறது என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்! ஒரு நாள் முழுவதும் – ஒரு வாரம் முழுவதும் ஓய்வில்லாமல் உழைத்தாலும், அடுத்த நாள் கழக உடன்பிறப்புகளின் இருக்கப் போகிறோம் என்ற எண்ணம் வந்துவிட்டாலே புதிதாக ஒரு எனர்ஜி வந்துவிடும். ஏன் என்றால், நீங்கள்தான் "சீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி!" இந்தப் பாசப்பிணைப்பை 'உடன்பிறப்பே...' என்ற ஒரே ஒரு சொல் மூலமாக உருவாக்கிக் கொடுத்தவர் நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.

திருவண்ணாமலையும் தீபமும் போலதான், திருவண்ணாமலையும் தி.மு.க.வும்! யாராலும் பிரிக்க முடியாது! பல்வேறு வரலாற்றை நம்மடைய பொதுச் செயலாளர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒன்று, இரண்டை மட்டும் உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய கழகம் உருவான அன்று நடந்த முதல் பொதுக் கூட்டத்தில் 1,451 ரூபாய் வசூலானது. அதில் 100 ரூபாய் இதே திருவண்ணாமலையை சேர்ந்த நம்முடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ப.உ. சண்முகம் அவர்கள் வழங்கியது. 1957 தேர்தலில் நாம் முதன் முதலாக போட்டியிட்டு 15 பேர் வெற்றி பெற்றோம். அதில், 3 பேர் இந்த மாவட்டத்துக்காரர்கள்! முதல் நாடாளுமன்றத் தேர்தலில் 2 பேர் வெற்றி பெற்றார்கள். அதில் ஒன்று, இந்த திருவண்ணாமலை தொகுதி! சட்டமன்றத் துக்கு, ப.உ. சண்முகம், பி. எஸ். சந்தானம், களம்பூர் அண்ணாமலை! நாடாளுமன்றத்திற்கு, இரா.தர்மலிங்கம்! இன்றைக்கும் இவர்கள் பெயரை வரலாறு சொல்லிக் கொண்டு இருக்கிறது! அப்படிப்பட்ட நம்முடைய ப.உ.ச. அவர்களுக்கும் இரா.தர்மலிங்கம் அவர்களுக்கும் கொஞ்சம் நாட்களுக்கு முன்புதான் நம்முடைய வேலு அவர்களின் சீரிய முயற்சியில் மாவட்டக் கழகம் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடியது!

அண்ணன் துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல, 1963இல் தி.மு.க.விற்கு திருப்புமுனை தந்தது திருவண்ணாமலை இடைத்தேர்தல்! அப்போது ஆளுங்கட்சி, காங்கிரஸ்! நம்முடைய வேட்பாளர், ப.உ.ச. அவர்கள்! தேர்தல் பொறுப்பாளர், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்! அன்றைக்கு திருவண்ணாமலை கொடுத்த வெற்றிதான், 1967இல் நாம் ஆட்சி அமைக்க அடித்தளமாக அமைந்தது!

### வெற்றி தீபத்திற்கு அடித்தளம் அமைத்த தி.மு.க.!

அதேபோல், 2021 தேர்தலின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தது, வரவேற்புரை ஆற்றுகிறபோது வேலு அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுச் சொன்னார், 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்' பயணத்தையும் இதே திருவண்ணாமலையில் இருந்துதான் நான் தொடங்கினேன். தொகுதி தொகுதியாகச் சென்று கோரிக்கை மனுக்களை வாங்கினேன். "உங்கள் கவலைகளை, கோரிக்கைகளை, எதிர்பார்ப்புகளை என்னிடம் ஒப்படைத்திருக்கிறீர்கள். ஆட்சி அமைந்ததும் 100 நாட்களில் தீர்வு காண்பேன்" என்று சொன்னேன். ஸ்டாலினிடம் மனு கொடுத்தால் நிச்சயமாக நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு, இலட்சக் கணக்கான மக்கள் மனு கொடுத்தார்கள். அந்த அடிப்படையில், தமிழ்நாடு முழுவதும் வெள்ளம்போல் மக்கள் திரண்டார்கள். அன்றைக்கு வெற்றித் தீபத்தைத் திராவிட முன்னேற்றக் கழகம் பெறுவதற்கு அடித்தளம் அமைத்தது, திருவண்ணாமலை


**தொடர்ச்சி 3 ஆம் பக்கம்**





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.10.2023) திருவண்ணாமலையில் நடைபெற்ற, வடக்கு மண்டல கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, கழக துணை பொதுச் செயலாளர்கள், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப. செல்வராஜ், திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ. வேலு, அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை. துணை அமைப்புச் செயலாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, ஆஸ்டின், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள் முன்னாள் உறுப்பினர்கள், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தரணி வேந்தன், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

## ஜனநாயக விரோத, மதவாத அரசியல் செய்யும் பா.ஜ.க.வை விரட்டியடிக்கும் வலிமை கொண்டவர்கள் நாங்கள்!

# இந்தியாவை "இந்தியா" கூட்டணி நிச்சயம் மீட்கும்!

## "தைனிக் ஜாக்ரன்" இந்தி நாளேடுக்கு தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பேட்டியில் உறுதி!

**சென்னை, அக். 23 -**

**"தைனிக் ஜாக்ரன்" என்ற இந்தி நாளேட்டுக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த சிறப்புப் பேட்டியில், ஜனநாயக விரோத, மதவாத அரசியல் செய்யும் பா.ஜ.க.வை விரட்டியடிக்கும் வலிமை கொண்டதுதான் "இந்தியா" கூட்டணி எனவும், ஒன்றிய பா.ஜ.க. அரசிடமிருந்து இந்தியாவை "இந்தியா" கூட்டணி நிச்சயம் மீட்கும் எனவும் உறுதிபடக் குறிப்பிட்டார்.**

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'தைனிக் ஜாக்ரன்' இந்தி நாளேட்டுக்கு அளித்துள்ள நேர்காணலின் தமிழாக்கம் வருமாறு:-

**கேள்வி :-** *தமிழ்நாடு இந்தியாவின் பெரிய, வலிமையான மாநிலங்களில் ஒன்றாக இருந்தும், மொழி, மதம், சில திட்டங்கள் என எப்போதும் வடக்குடன் உரசலில் இருந்து வருவதாகத் தோன்றுவதன் காரணம் என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** - தமிழ்நாடு வலிமை மிகுந்த மாநிலம் என்பது உண்மை. நாங்கள் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற சமத்துவத்தத்துவத்தை கொண்டவர்கள். எங்கள் தாய்மொழி தமிழ், இந்தியாவின் முதல் செம்மொழித் தகுதியைப் பெற்றது. தமிழ்நாட்டில் தமிழைத் தாழ்த்தி, இந்தியைத் திணிக்க முயன்றால், அதனை எப்போதும் நாங்கள் எதிர்த்துப் போராடுவோம். அதே நேரத்தில், வடமாநிலங்களும், அவரவர் தாய்மொழியைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் எங்களது நிலைப்பாடு.

### நாங்கள் எந்த மொழிக்கும் எதிரியல்ல! மொழித் திணிப்பைத்தான் எதிர்க்கிறோம்!

**கேள்வி :-** *உங்கள் கட்சி இந்தி மொழிக்கு எதிரானதா?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின் :** - நாங்கள் இந்தி என்கிற மொழிக்கோ வேறு எந்தவொரு மொழிக்கோ எதிரானவர்கள் அல்ல. எங்கள் கழகத்தை நிறுவிய பேரறிஞர் அண்ணா, இதனை 1962லேயே நாடாளுமன்ற மாநிலங்களவையில் விளக்கியிருக்கிறார். இந்தித் திணிப்பைத் தான் நாங்கள் எதிர்க்கிறோம். இன்று வங்காளம், மராட்டியம், கர்நாடகம் உள்ளிட்ட அவரவர் தாய்மொழிகளைக் காக்க நினைக்கும் மாநிலங்கள் அனைத்தும் இதே நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும். இந்தியா பன்முகத்தன்மை கொண்ட ஒன்றியம். இங்கே அவரவர் தாய்மொழிதான் பண்பாட்டின் உயிர்நாடி.



அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பே, தமிழ்நாட்டில் தமிழ் ஆங்கிலம் என்கிற இரு மொழிக் கொள்கைக்கான சட்டத்தை நிறைவேற்றி நடைமுறைப்படுத்திவிட்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள். மூன்றாவது மொழி என்கிற சுமை ஏற்றப்படாத காரணத்தால், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக் குறியீடு உலகளாவிய குறியீடுகளுடன் ஒப்பிடக்கூடிய நிலையில் உள்ளது. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை நிர்ணயித்துள்ள இலக்குகளைத் தமிழ்நாடு ஏற்கனவே கடந்து, இரு மொழிக் கொள்கை வாயிலாக பல படிகள் முன்னேறியிருக்கிறது. எனவே, தமிழ்நாட்டிற்கேற்ற தனித்துவமான கல்விக் கொள்கை வகுத்துக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:-** *அண்மையில், உங்கள் மகனான அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சனாதனம் குறித்து தெரிவித்த சில கருத்துகள் வட இந்தியாவில் பெரிய சர்ச்சை உண்டாக்கியது. அதில் உங்கள் நிலைப்பாடு என்ன?*

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** சாதி ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதை, இந்து மதத்தை ஒழிக்க வேண்டும் என்று சொன்னதாக பா.ஜ.க.வின் ஐடி விங் பொய்யாகப் பரப்பியது. அதே போல 'ஜெனோசைட்' என்ற சொல்லையும் உதயநிதி பயன்படுத்தவில்லை. பா.ஜ.க. ஆட்சியில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு எந்த சாதனையும் இல்லை. 7 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கான ஊழல்கள்தான் வெளிப்பட்டுள்ளன. இந்த ஊழல்களுக்கு பதில் சொல்ல முடியாத பா.ஜ.க அரசு ஊழல்களைச் சுட்டிக்காட்டிய சி.ஏ.ஜி அதிகாரிகளை மாற்றி இருக்கிறது. இவற்றைத் திசைத்திருப்ப உதயநிதி பேச்சை சர்ச்சையாக்கி உள்ளார்கள்.

**கேள்வி :-** *சனாதனம் பற்றி உங்கள் மகன் தெரிவித்த கருத்துகளை அவர் திரும்பப் பெறவில்லை என்ற கருத்தே பொதுவாக உள்ளது. நீங்களும் இது பற்றி விலாவாரியாக இதுகுறித்துப் பேசாமல் இருப்பதில் ஏதேனும் அரசியல் நலன் சம்பந்தப்பட்டுள்ளதா?*

### அனைத்து மதத்தினரின் உரிமைகளை மதிப்பவர்கள் நாங்கள்!

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:-** எங்களைப் பொறுத்தவரை, நாங்கள் அனைத்து மதத்தினரின் உரிமைகளையும் மதிப்பவர்கள். ஏற்றத்தாழ்வுகளை உறுதியாக எதிர்ப்பவர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்த 889 நாட்களில் 1000 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு செய்திருக்கிறோம். இரண்டரை ஆண்டுகாலத்தில் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான கோவில் சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களிடம்


**தொடர்ச்சி 4 ஆம் பக்கம்**